Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNSDAY OCTOBER 20, 2021

புதன்கிழமை ஒக்டோபர் 20, 2021 | ஒளி: 07 கதிர் 131 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## முதலில் மாற்றம் பின்னரே தேர்தல்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

தேர்தல் முறைமையில் மாற்றம் செய்வது தொடர்பான அபிப்ராயத்தை ஜனாதிபதி மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளதாகவும் அது “சுபீட்சத்தின் நோக்கு“ என கொள்கை அறிவிப்பிலும் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்த முடியாது. என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே,

தொடர்ச்சி P2



## பசு வதைக்கு தடை

### ஐந்து சட்டங்களை திருத்த அமைச்சரவை அங்கிகாரம்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

உள்ளூர் விவசாயத்துறை மற்றும் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பசு வதை செய்வதை தடை செய்வதற்கும், அதற்கு ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளையும் திருத்துவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

### கடற்படையினரின் தாக்குதலில்

## மீனவர் படுகாயம்; இருவர் தப்பியோட்டம்

■ செந்துரன் பிரதீபன்



வேலணை - துறையூர் பகுதியில், நேற்று முன்தினம் (18) மாலை, கடற்படை புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட தாக்குதலில் படுகாயங்களுக்கு உள்ளான மீனவர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி - வெட்டுகாடு, கோவிலடி, பகுதியைச் சேர்ந்த சுப்பையா வசந்தன் (வயது 26) என்ற இளைஞனே, இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி உள்ளதாக, ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், கடற்படையினர் தங்களைத் தாக்க வருவதை உணர்ந்துகொண்ட ஏனைய 2 மீனவர்களும் தப்பிச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

## கடனை வழங்க இந்தியா நிபந்தனை விதிக்கவில்லை

■ மகேஸ்வரி விஜயனந்தன்



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமானது, எரிபொருளுக்காக இந்தியாவிலிருந்து கடனைப் பெறுவதற்கான முன் நிபந்தனை அல்ல என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான கடனை வழங்குவதற்காக , மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு இந்தியா எந்தவொரு நிபந்தனையையும் முன்வைக்கவில்லை என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (19) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு நிபந்தனை விதித்தா இந்தியா,

தொடர்ச்சி P2

### மூடப்பட்டிருந்த உடற்பயிற்சி நிலையத்தை

## சீல் உடைத்து திறந்தார் ஜீவன்

### இ.தொ.காவின் அராஜகம் ஆரம்பம் என குற்றச்சாட்டு

■ சுதத். எச்.எம்.ஹேவா



ஹட்டன்- டிக்கோயா நகரசபைக்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்தாமை தொடர்பில், சீல் வைக்கப்பட்ட ஹட்டன்- டன்பார் பிரதேசத்திலுள்ள உடற்பயிற்சி கூடமொன்று, தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் சீல் உடைக்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

ஹட்டன்- டிக்கோயா நகர சபை மூலம் நிர்வகிக்கப்படும் ஹட்டன்- டன்பார் மைதானத்தின் நடத்திச் செல்லப்படும் உடற்பயிற்சி நிலையத்திலிருந்து இந்த வருடத்துக்கான வரி, செலுத்தப்பட்டிருக்கவில்லை என்றும் இதற்கமைய, நகர சபை நிதிக் குழுவில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, இந்த நிலையத்தை சீல் வைத்து மூட நேற்று முன்தினம் (18) நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

### மேல் மாகாணம் தவிர்த்து

## 8 மாகாணங்களின் மாணவர்களுக்கு தடுப்பூசி

நாளை 21 ஆம் திகதிக்குப் பின்னர் மேல் மாகாணத்தை தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

“அதற்கமைய க.பொ.த உயர்தர பரீட்சைக்கு முதற்தடவை மற்றும் இரண்டாவது தடவையாக தோற்றவுள்ள மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

தொடர்ச்சி P2

## 750 மது போத்தல்களுடன் யாழில் இருவர் கைது

■ செந்துரன் பிரதீபன்



சட்டவிரோதமான முறையில் அளவுக்கு அதிகமாக மதுபான போத்தல்களை எடுத்து சென்ற இருவர் சந்தேகத்தின் பேரில் நேற்று (19), கைது செய்யப்பட்டுள்ளனர் என வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் குணதிலக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நிமலராஜனுக்கு நினைவேந்தல்...

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின், 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும், நேற்று (19) நடைபெற்றன. (படப்பிடிப்பு: எஸ். நிதர்ஷன், க. அகரன்)

## கடவுச்சீட்டு விநியோகம் நாளாந்தம் அதிகரிப்பு




நாளாந்தம் பெறப்படும் கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது என அறிவித்துள்ள குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம், ஒரு நாள் சேவையின் கீழ் சேவையை பெறுவோரின் எண்ணிக்கை 500 ஆல் அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் ஒரு நாள் சேவையின் கீழ் சேவை பெறுவோரின் எண்ணிக்கை ஆயிரமாக காணப்பட்டதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கண்டியன் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தில் திருத்தம்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

கண்டியன் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் (18) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூடத்தில் நீதியமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கே இவ்வாறு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க திருமணப் பதிவு செய்தல் (திருத்தப்பட்ட சட்டம்) மூலம் திருமணப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் உறுப்புரை திருத்தப்பட்டுள்ளதுடன், அதற்கமைய, சிறுவயதுத் திருமணங்களுக்கு பெற்றோரின் விருப்பு ஒப்புதல் அவசியமெனக் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## கொரோனாவுக்கு வேலி போடும் சினோ:.பாம்

சினோஃபாம் தடுப்பூசி போடப்பட்டவர்களின் உடல் தொடர்ந்து கொரோனா வைரஸை எதிர்த்து போராடும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை,

தொடர்ச்சி P2

## ‘ஊழலை மறைக்கவே உழுந்தார் சுமந்திரன்’

■ க. அகரன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஊழல் குற்றச்சாட்டை மறைக்கவே, வயலை சுமந்திரன் உழத் தொடங்கினார் எனத் தெரிவித்த தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார்,

தொடர்ச்சி P2

## கடல் பேரணியை இந்தியாவுக்கு எதிரானதாக சித்தரிக்க முயற்சி



சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே கடல் போராட்டத்தை தாங்கள் மேற்கொண்டிருந்தோம் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், எமது போராட்டத்தை இந்தியாவுக்கு எதிரானதாக சிலர் சித்தரிக்க முயல்கின்றனர் என்றார்.

இந்த தடைச்சட்டம் முறையாக நடைமுறை படுத்தப்பட்டிருந்தால் இந்திய மீனவர் ஒருவரின் உயிர், நேற்றிரவு (நேற்றுமுன்தினம்) உயிர் பிரிந்திருக்காது. எனவே, இந்த சட்டம் ஒழுங்கான முறையில் உள்ளது. நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை தெளிவாக வெளிப்படுத்தினால் இப்படியான அநாவசியமான இழப்புகள் ஏற்படுவதை தடுக்கலாம் என்றார்.

இலங்கையில் மட்டும் தடை செய்யப்பட்டுள்ளது என யாருமே நினைக்ககூடாது இந்தத் தொழில்முறை தடை செய்யப்பட வேண்டுமென இந்திய அரசு மற்றும் எமது அரசும் 2016 ஆம் ஆண்டு ஒன்றாக பேசி, இரண்டு அரசாங்கங்களும் இணங்கி இருந்தன.

இந்தத் தொழில் கடல் வளத்துக்கு பாதிப்பானது,

தொடர்ச்சி P2

## இழுவை வலை தடைச் சட்டத்தை நல்லாட்சியில் பயன்படுத்தாதது ஏன்?

### அமைச்சர் டக்ளஸ் கேள்வி: கடல் பேரணி தோல்வி என்கிறார்



இழுவை வலை தடைச் சட்டத்தினை உருவாக்கியதாக தெரிவிக்கின்வர்கள், அந்தச் சட்டத்தினை அமுல்ப்படுத்தாமல் இருந்தது எதற்காக என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று (19) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற எல்லை தாண்டிய அத்துமீறிய சட்ட விரோத தொழில்முறைக்கு எதிராக 2017 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இழுவை வலை தடைச் சட்டம் பயன்படுத்த ப்படாமையினாலேயே இந்தியக் கடற்றொழிலாளர் அதிகளவில் எல்லை தாண்டி வருவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதுதொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பசு வதைக்கு தண்டனை



அதனடிப்படையில், விலங்கு அறுப்பு தொடர்பான உள்ளூராட்சி மன்றங்களால் நிறைவேற்றப்பட்டுள்ள துணைச் சட்டங்களைத் திருத்தம் செய்வதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2020 செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவற்றுக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள்/ கட்டளைச் சட்டங்களைத் திருத்தம் செய்வதற்காக சட்ட வரைஞரால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

272 ஆம் அத்தியாயத்தின் 1893 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க பசு வதை கட்டளைச் சட்டம்

1958 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம்

252 ஆம் அத்தியாயத்தின் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

255 ஆம் அத்தியாயத்தின் நகரசபைகள் கட்டளைச் சட்டம்

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

குறித்த சட்டமூலம் அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு இணங்கவில்லை என சட்டமா அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதற்கமைய, குறித்த சட்டமூலங்களை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காகவும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை யோசனையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ; மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்திருந்தனர்.

# முதலில் மாற்றம் பின்னரே தேர்தல்

அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இலங்கையில் நடைபெறும் நான்கு பிரதான தேர்தல்களும் நான்கு முறைகளின் கீழ் நடத்தப்படுகின்றன. இந்த முறைகள் முழு உலகுக்கே நகைச்சுவையாக அமையும் என தெரிவித்த அவர், முதலில் தேர்தல் முறையில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். எனவே இந்த திருத்தங்களை இந்த வருடத்துக்குள் கொண்டு வர முடியாது. இந்த வருடம் நிறைவடைவதற்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன என்றார்.

மாகாண சபைத் தேர்தலானது தமிழ் மொழியை தாய்மொழியாக் கொண்ட வடக்கு, கிழக்கு மக்களுக்காகவும் அவர்களது அரசியல் செயற் பாடுகளை பலப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டதாலும், கடந்த ஆட்சி காலத்தில் முன்வைக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு இலக்கம் 17 என்ற மாகாண சபைகள் திருத்தச்சட்டம் மிகவும் சிக்கலுக்குரியதாகும். எனவே அதனை திருத்த வேண்டும் என்றார்.

> **தேர்தல் முறையில் மாற்றம் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என தெரிவித்த அவர், விகிதாசார முறையின் கீழ் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டன. இதனால் பல நன்மைகளும் உள்ளதை மறந்து விட முடியாது**

எனவேதான் தேர்தல் முறைகளில் மாற்றம் செய்ய வேண்டும் என்றும் தேர்தல் முறைகளில் உள்ள விகிதாசார முறையின் பண்புகளைப் பாதுகாத்து, தேர்தல் முறையில் மாற்றம் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என தெரிவித்த அவர், விகிதாசார முறையின் கீழ் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டன. இதனால் பல நன்மைகளும் உள்ளதை மறந்து விட முடியாது என்றார்.

# கடனை வழங்க இந்தியா நிபந்தனை விதிக்கவில்லை

இலங்கைக்கு கடன் உதவி வழங்கியது என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்த அவர், மாகாண சபைத் தேர்தலுக்கும் கடனுதவிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றார்.

பொதுவாக எந்தவொரு நாட்டிலிருந்தும் கடனைப் பெறும் போது, அதற்கென சில நிபந்தனைகள் இருப்பது வழமை. ஆனால் இந்தியாவிலிருந்து பெறும் கடன், நிபந்தனையின்றி வழங்கப்படுகின்றது என்றார்.

# சீல் உடைத்து திறந்தார் ஜீவன்

எனினும், 1இலட்சரூபாய் வரியை செலுத்திய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நேற்று முன்தினம் இரவே இந்த உடற்பயிற்சி நிலையத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற நகர சபையின் அதிகாரியொருவர், அங்கிருந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவரால் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். இது தொடர்பில் நாளை (21) நகர சபையின் தவிசாளரிடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதுத் தொடர்பில் கருத்துரைத்த நகர சபையின் தவிசாளர் எஸ். பாலச்சந்திரன், "குறித்த உடற்பயிற்சி நிலையத்தை வரி முறையின் கீழ் பெற்றுக்கொண்ட நபர், இந்த வருடத்துக்கான எவ்வித வரியையும் செலுத்தியிருக்கவில்லை. இதற்கமைய, நகர சபை நிதிக்குழு கூட்டத்தில் இந்த நிலையத்தை சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது" என்றார்.

சீல் வைப்பதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட நபருடன் பல தடவைகள் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் பலனளிக்காத நிலையில், அந்த நிலையத்துக்கு சீல் வைத்தோம்.

எனினும் சீல் வைத்து மூடப்பட்ட அன்றிரவே இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலையிட்டு, ஒரு இலட்சம் ரூபாய் வரியை செலுத்தி அதனை திறக்க நடவடிக்கை எடுத்தார் என்றார்.

# மீனவர் படுகாயம்: இருவர் தப்பியோட்டம்

குறித்த 3 மீனவர்களும், பூநகரி பகுதியில் இருந்து வேலணை பகுதிக்கு படகு மூலம் வந்துள்ளனர். இதன்போது, அவர்கள் வந்த படகை மறித்து சோதனையிட்ட கடற்படை புலனாய்வுப பிரிவினர், 'நீங்கள் கஞ்சா கடத்தவா வந்துள்ளீர்கள்' எனக் கூறி, மீனவர்களை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 750 மது போத்தல்களுடன் யாழில் இருவர் கைது

காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் பொன்னாலை சந்தியில் வைத்து, இவர்கள் கைது செய்யப்பட்டனர் என, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.

சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த ஹயஸ் வாகனம் ஒன்றை சோதனை செய்ய முற்பட்ட போதே, அதில் இருந்து 750க்கும் மேற்பட்ட 180 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று (19), போயா தினம் என்பதால், அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கத்தோடு இந்த மதுபான போத்தல்கள் எடுத்துச் சென்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் இருவரையும், மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கொரோனாவுக்கு வேலி போடும்...

நோய் எதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் பிரிவு நடத்திய பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

சினோஃபாம் தடுப்பூசியின் மூலம் பிறபொருள் எதிரிகள் உற்பத்தி மற்றும் உடலில் உள்ள கொரானா வைரஸுக்கு டி செல்கள் பதில் அளிப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலேயே இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

ண்டாவது டோஸைப் பெற்ற 12 வாரங்களுக்குப் பின்னர், உடலில் உள்ள டி செல்கள் கொரோனா வைரஸுக்கு வெளி உடலாக வெற்றிகரமாக பதிலளித்ததாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வு குறித்து கருத்து தெரிவித்த பிரிவின் தலைவர் டொக்டர் சந்திம ஜீவந்தரா, அனைத்து வயதினருக்கும் தடுப்பூசியால் உண்டாகும் நோய் எதிர்ப்பு சக்தி காலப்போக்கில் குறைந்து வருவதாக தெரிவித்தார்.

குறிப்பாக வைரஸுக்கு எதிரான பிறபொருள் எதிரிகள், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, கணிசமாகக் குறைவதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இருப்பினும், பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு ஏற்பட்டால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுதல் மற்றும் நோயின் தீவிரம் தொடர்பில் பரிசோதனைகள் அவசியம் என்று பரிசோதனைக் குழு கருதுகிறது.

# 8 மாகாணங்களின் மாணவர்களுக்கு தடுப்பூசி

விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 20 தொடக்கம் 30 வயதுக்கிடைப்பட்ட 60 சதவீதத்திற்கும் மேற்பட்டோருக்கு இதுவரை தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

# கண்டியன் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தில் திருத்தம்

குணரத்னம் எதிர் பதிவாளர் நாயகம் வழக்குத் தீர்ப்புக்கமைய 18 வயதுக்குக் குறைவானவர்களுக்கு இலங்கையில் சட்டபூர்வ திருமணத்தைப் பதிவு செய்வதற்கு இயலாது. அவ்வாறான திருமணத்துக்கு பெற்றோரின் விருப்பு ஒப்புதல் இருந்தல் சட்டத்தின் முன் செல்லுபடியற்றது.

குறித்த வழக்குத் தீர்ப்புக்கமைய தகுதி வாய்ந்த அதிகாரம் படைத்தவர் ஒருவருடைய உடன்பாட்டுடன் சிறுவயதுக்காரர்களின் திருமணத்திற்கு அதிகாரம் வழங்கும் சட்டங்களுக்கு ஏற்புடைய உறுப்புரைகளை முடிவுறுத்த வேண்டியுள்ளது.

அதற்கமைய, தற்போது முஸ்லிம் திருமண மற்றும் திருமண முறிவு சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு இணையாக கண்டியன் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்திற்கு ஏற்புடைய இசைவுகளை நீக்குவதற்கும், அதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கும் சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# 'ஊழலை மறைக்கவே உழுந்தார்...

அதன் பின்னர் படகோட்டம் மற்றும் உரத்தைப் பற்றி பேசுகிறார் எனவும் கூறினார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 21ஆவது ஆண்டு நினைவு நாள், நேற்று (19), தொடர் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டப் பந்தலில் அஞ்சலி செலுத்திவிட்டு, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், நிமலராஜனை வணங்குகிறோம், சுமந்திரனை நிராகரிக்கிறோம் எனவும் நிமலராஜன் படுகொலை, தமிழ் ஜனநாயகத்தை கொன்றது எனவும் கூறினார்.

இலங்கை ஜனநாயகம் என்பது சிங்களவரின் ஜனநாயகம், அது தமிழர்களை ஒடுக்குவதற்கு மாத்திரமே எனத் தெரிவித்த அவர், தமிழர்களின் ஜனநாயகம் என்பது, பாதுகாப்பான, பாதுகாக்கப்பட்ட தமிழர் தாயகம் வரும் போது தான் தமிழர் ஜனநாயகத்துக்கு உயிர் வரும் எனவும் கூறினார்.

நிமலராஜன் உயிருடன் இருந்திருந்தால், சுமந்திரனின் சதி முடிச்சுக்களை தனது பலம் வாய்ந்த எழுத்துகளால் அவிழ்த்து அம்பலப்படுத்திருப்பார் எனத் தெரிவித்த அவர், ஊழல் செய்யப்பட்ட தமிழ் எம். பி.க்கள் பதவியில் இருக்கும் வரை, தமிழர்கள் தங்கள் அரசியல் தீர்வைப் பெற முடியாது எனவும் கூறினார்.

# கடவுச்சீட்டு விநியோகம் நாளாந்தம் அதிகரிப்பு



எனினும், நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர், ஒரு நாள் சேவையின் கீழான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,500 ஐ கடந்துள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பிலுள்ள பிரதான காரியாலயத்தில் கடந்த 10 நாள்களுக்குள் ஒரு நாள் சேவையின் ஊடாக 12,158 பேர் கடவுச்சீட்டு பெற்றுள்ளனர்.

இந்த காலப்பகுதியில் சாதாரண சேவையின் கீழ் 11,242 பேர் கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளனர் என்றும் குடிவரவு -குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக மாத்தறை, கண்டி, வவுனியா மற்றும் குருணாகல் ஆகிய பகுதிகளிலுள்ள பிராந்திய அலுவலகங்களில் கடந்த 10 நாள்களுக்குள் 10,145 பேர் கடவுச்சீட்டு சேவையை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# கடல் பேரணியை இந்தியாவுக்கு...

சுற்றுச்சூழலை பாதிக்கிறது, அடுத்தடுத்த தலைமுறைக்கு மீன் வளத்தினை இல்லாமல் செய்கிற விடயமாகும் எனத் தெரிவித்த அவர், இதனை எவர் செய்தாலும் அது தண்டனைக்குரிய குற்றமாகும் இந்த சட்டத்தினை மீறி பலர் உள்நாட்டிலும் தொழில் செய்கிறார்கள் அவர்களுக்கு எதிராகவும் இந்த சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

விசேடமாக குருநகர் பகுதியில் இருக்கிறவர்கள் 6 வருடங்களுக்கு முதல் என்னுடைய உரையாடினர். அந்த முறைமையை பயன்படுத்தி மீன்பிடிப்பதை ஆறு மாதங்களில் நிறுத்தி விடுவோமென கூறினார்கள். ஆனால், கடல் வளங்கள் அழிக்கப்படுவதும் தெரிந்து கொண்டும் தொடர்ந்தும் செயற்படுகிறார்கள்.

> **தொழில்முறை என உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் அறிவித்து இருக்கின்றது**

உள்ளூர் மீனவர்களாக இருந்தாலும் வெளி மாவட்டங்களில் இருந்து எமது பிரதேசத்தில் தொழில்புரிபவர்களாக இருந்தாலும் அந்நிய நாட்டிலிருந்து வந்து தொழில் புரிபவர்களாக இருந்தாலும் இந்தத் தொழில்முறையானது சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளது அது தொடர்ச்சியாக தடுக்கப்பட வேண்டும் என்பதுதான் உண்மையான விடயமாகும்.

நாங்கள் நடத்திய போராட்டத்தினை இந்தியாவுக்கு எதிரான போராட்டமென சித்திரிப்பதற்கு பலர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் இது இந்தியாவுக்கு எதிரான ஒரு போராட்டம் அல்ல. இந்திய அரசாங்கமே 2016ஆம் ஆண்டு தடை செய்யப்பட வேண்டிய தொழில்முறை என உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் அறிவித்து இருக்கின்றது

# இழுவை வலை தடைச் சட்டத்தை நல்லாட்சியில் பயன்படுத்தாதது ஏன்?

குறித்த சட்டத்தினை உருவாக்கியபோது, மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்காக கூ.பி.டி.பி. கட்சியும் ஆதரவளித்திருந்தமையை நினைவூட்டினார். மேலும், தம்மால் உருவாக்கப்பட்ட ஆட்சிக் காலத்தில் குறித்த சட்டம் இயற்றப்பட்டதாக தெரிவிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தினை பிரயோகிக்கவில்லை எனவும் தெரிவித்தார். 2017 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இழுவை வலைச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் சுமார் 100 இற்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்ட போதிலும், அவைக்கு எதிராக இழுவை வலைத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டினார்.

எனினும், தற்போது குறித்த சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழரசுக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அவர்களின் ஆதரவாளர்களும் இணைந்து முல்லைத் தீவில் இருந்து பருத்தித்துறை வரை மேற்கொண்ட கடற் பயணம் தொடர்பாக அலட்டிக் கொள்ளவில்லை எனவும் அது தோல்வியில் முடிவடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# ஜனாதிபதியின் பதிலை கூற முடியாது

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்காவுக்கு வழங்குவதுத் தொடர்பில் அரசாங்கத்தில் உள்ள 11 கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமை உண்மையெனத் தெரிவித்த வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில, எனினும் அக்கடிதத்துக்கு ஜனாதிபதி வழங்கியிருக்கும் பதிலை பொதுவெளியில் கூற முடியாது எனவும் கூறினார்.

இதுத் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 சதவீதத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதுத் தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஆளுங்கட்சியின் பங்காளிகளாக இருக்கும் 11 கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தோம் என்றார்.



இதற்கு முன்னர் நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்திருந்தபோதிலும் நாட்டை உடனடியாக முடக்க வேண்டும் என அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதிக்கு கூட்டாகக் கடிதம் எழுதியிருந்தோம். இந்த கடிதம் ஊடகங்களுக்கும் அனுப்பி வைத்திருந்தோம் என்றார்.

எனினும் யுகதனவி தொடர்பான கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்த கடிதம் 11 கட்சித் தலைவர்களும் தனிப்பட்ட ரீதியில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம். தனிப்பட்ட கடிதம் என்பதால், இந்த கடிதம் தொடர்பில் நாம் ஊடகங்களுக்கு தகவல்கள் வழங்கவில்லை. ஜனாதிபதிக்கு நாம் அனுப்பியிருந்த கடிதம் தொடர்பில் எமக்கு பதில் ஒன்று கிடைத்துள்ளது. எனினும் அதனை பொதுவெளியில் கூற முடியாது எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஊடகங்களுக்கு அறிவிக்க வேண்டுமாக இருந்தால் அதுத் தொடர்பில் குறித்த 11 கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும் எனவும் கம்மன்பில கூறினார்.

இதேவேளை, பங்காளிக்கட்சிகளின் கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்திருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையிலிருந்து 125 தேரர்கள் குஷிநகருக்கு இன்று பயணம்

## பிரதமர் மோடி இன்று திறந்துவைப்பார்



இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தின் குஷிநகரில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இன்று (20) திறந்துவைப்பார். அந்த திறப்பு விழாவில், இலங்கையிலிருந்து 125 பௌத்த தேரர்கள் அடங்கிய மதத்தலைவர்கள் அடங்கிய குழு பங்கேற்கவுள்ளது.

குஷிநகர் சர்வதேச விமான நிலையத்துக்கு கொழும்பிலிருந்து நேரடியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செல்லவுள்ள நிலையில், அன்றையதினமே பிரதமர் மோடியால் இவ்விமான நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது என இந்திய செய்திகள் தெரிவித்திருந்தன.

அந்தவகையில், பிரதான பௌத்த புனித இடமொன்றான குஷிநகரில் தரையிறங்கவுள்ள முதலாவது சர்வதேச விமானமான இலங்கை விமானம் அமையவுள்ளது. குஷிநகருக்கு இலங்கையிலிருந்து உட்பட உயர் எண்ணிக்கையான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்லுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பௌத்த தேரர்கள் அடங்கிய தூதுக்குவில் அங்கம் வகிக்கும் பௌத்த தேரர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை, அலரிமாளிகையில் வைத்து நேற்று (19) சந்தித்தனர்.

# அம்மாவின் தவறான உறவால் மகன் பலி

■ ரஸீன் ரஸ்மின்



முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரங்குளி - கரிக்கட்டைப் பிரதேசத்தில் கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் மதுரங்குளி கரிக்கட்டைப் பிரதேசத்தில் நேற்று (18) இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கும் முந்தல் பொலிஸார், மதுரங்குளி கரிக்கட்டை பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே (வயது 24) இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மதுரங்குளி கரிக்கட்டைப் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் நீண்ட காலமாக நபர் ஒருவருடன் தவறான தொடர்பை பேணி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், நேற்று (18) அறையொன்றில் இருந்துகொண்டு தனது கள்ளக் காதலனுக்கு இரவு நேரச் சாப்பாடு ஊட்டிக்கொண்டிருந்த போது அங்கு வருகை தந்த குறித்த பெண்ணின் மகன் இதனைப் பார்த்ததுடன் கடுமையாகவும் கண்டித்துள்ளதுடன், தாயின் கள்ளக் காதலனை வீட்டை விட்டு வெளியே போகுமாறும் கூறியுள்ளார்.

இதையடுத்து தாயின் கள்ளக் காதலனுக்கும், இளம் குடும்பஸ்தரான மகனுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அந்த வாய்த்தர்க்கம் முற்றியதால் ஆத்திரமடைந்த தாயின் கள்ளக் காதலன் அருகிலிருந்த கூரிய ஆயுதம் ஒன்றை எடுத்து குறித்த இளம் குடும்பஸ்தரான கள்ளக் காதலியின் மகனை கடுமையாகத் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி, உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி கரிக்கட்டைப் பகுதியைச் சேர்ந்த குறித்த இளம் குடும்பஸ்தர் கேகாலை - அலவ பிரதேசத்தில் திருமணம் முடித்துள்ளார். இந்த நிலையில் சுகயீனமடைந்துள்ள தனது தாயை பார்ப்பதற்காக கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் மதுரங்குளியிலுள்ள தனது தாயின் வீட்டுக்கு வருகை தந்துள்ள நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# சிறப்புக் கவியரங்கம்

ரஜரட்ட எடு நெட்வேர்க் அமைப்பினர் நபிகள் நாயகத்தின் பிறந்த தினத்தை முன்னிட்டு சிறப்புக் கவியரங்கம் ஒன்றினை இன்று (20) புதன்கிழமை இரவு 8.00 மணிக்கு Zoom செயலி வாயிலாக நேரலையாக ஏற்பாடு செய்துள்ளார்கள். "யாவரும் விரும்பும் யாநபி" என்ற மகுடத்தின் கீழ் சந்தக்கவி கிண்ணியா அமீர் அலியின் தலைமையில் இக்கவியரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கவியரங்கில் கவிஞர் நாச்சியாதீவு பர்வீன், எம்.எஸ். அப்துல் லத்தீப், கிராமத்தான் கலீபா, கல்முனை அறூபா அஹ்லா, அநுராதபுரம் சீமா ஷைரீன் ஆகியோர் கவிதை பாட உள்ளனர். ரஜரட்ட எடு நெட்வேர்க் அமைப்பினர் இந்த அசாதாரணமான கொவிட் தொற்று காலத்தில் பொதுமக்களுக்கு கொவிட் தொடர்பிலான விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்க்கும், கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களை மனதளவில் தன்னம்பிக்கை ஊட்டும் வகையிலும் பல்வேறு நேரலை நிகழ்சிகளை ஒழுங்கு செய்து வெற்றிகரமாக நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அக்டோபர் 5ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் வகையில் இவ்வமைப்பினர் நடாத்திய ஆசிரியர்தின விஷேட நிகழ்வு பலராலும் விதந்துரைக்கப்பட்டது.

# துப்பாக்கிகளுடன் மூவர் கைது

■ ரஸீன் ரஸ்மின்



தப்போவ சரணாலயத்துக்கு உட்பட்ட பாவட்டமடு பகுதியில் இரண்டு சட்டவிரோத துப்பாக்கிகள் உள்ளிட்ட உபகரணங்களுடன் இளைஞர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் தப்போவ மற்றும் பாவட்டமடு பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு நேற்று முன்தினம்(18) கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் காட்டு யானைகளை விரட்டும் பணியில் ஈடுபட்ட புத்தளம் கருவலகஸ்வெவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து, அப்பகுதியில் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் மூவர் மிருகங்களை வேட்டையாடப் பயன்படுத்தும் இரண்டு துப்பாக்கிகள் உள்ளிட்ட உபகரணங்களை தம்வசம் வைத்திருந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான மூன்று இளைஞர்களும் தப்போவ சரணாலயத்திற்கு உட்பட்ட பாவட்டமடு பகுதியில், மிருகங்களை வேட்டையாடுவதற்காக துப்பாக்கி உள்ளிட்ட உபகரணங்களுடன் வருகை தந்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக கருவலகஸ்வெவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி உள்ளிட்ட உபகரணங்களை தமது பொறுப்பில் எடுத்த கருவலகஸ்வெவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள், குறித்த மூவரையும் பிணையில் விடுவித்ததுடன், இம்மாதம் 26ஆம் திகதி புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டுள்ளனர்.

# சோர்வடையாது தொடர்ந்து உற்பத்தி செய்யவும்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

நாட்டில் தேயிலை உற்பத்தி உள்ளிட்ட ஏனைய உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக, அரசாங்கம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, உரிய நேரத்தில் உரம் கிடைக்காத காரணத்தால் சோர்வடையாமல், தொடர்ந்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கோரிக்கை விடுத்தார்.



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஏதாவது ஒரு திட்டத்தை முன்னெடுக்கும் போது, பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவது இயல்பானது எனத் தெரிவித்த அவர், எனவே அரசாங்கத்தின் திட்டங்களுடன் இணைந்து செயற்படுமாறு தேயிலை உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட சகலரிடமும் வேண்டுகோள் விடுப்பதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ அடங்கலான இந்த அரசாங்கம், இந்த நாட்டு மக்களின் ஆரோக்கியம் தொடர்பில் எடுத்த சாதகமான நடவடிக்கையாகவே சேதன பசளைத் திட்டம் அமைந்தது என்றார்.

உர உற்பத்தியில் சில குறைப்பாடுகள் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், அதனை நிவர்த்தி செய்யவே உர இறக்குமதியை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் எனினும் இறக்குமதி செய்த உர தொகையில் காணப்பட்ட தரக் குறைப்பாடே இந்த சிக்கல்களுக்கு காரணம் என்றார்.

இதேவேளை, கடந்த மாதம் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடையவில்லை எனத் தெரிவித்த அவர், ஆனால் தற்போது தேயிலை உற்பத்தி விழ்ச்சியடைந்துள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம். எனவே தேயிலை உற்பத்திக்கு தேவையான நைட்ரிஜன் உரம் தொகை இன்று நேற்று (19) கிடைக்கும் அதேவேளை, ஏனைய நைட்ரிஜன் தொகை எதிர்வரும் மாதங்களில் இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

# பர்மாவிலிருந்து கடனுக்கு அரிசியை இறக்கவில்லை

■ மகேஸ்வரி விஜயனந்தன்



கடன் அடிப்படையில் பர்மாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வது குறித்து எவ்வித கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, பணம் கொடுத்து அரிசியை இறக்குமதி செய்வதற்கான வழி அரசாங்கத்திடம் உள்ளது என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

அரிசியில் தன்னிறைவு காண்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் கொள்கைகளில் உள்ளதென்றும் விவசாயிகளுக்கு சாதாரண விலையைப் பெற்றுக்கொடுப்பதை நோக்காக் கொண்டு, உறுதிப்படுத்தப்பட்ட நெல்லின் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றார்.

ஆனால் வெளிப்புற சக்திகள் ஊடாக நெல்லின் விலையை அதிகரிப்பதால், , விவசாயிகளுக்கு நன்மையும் நுகர்வோருக்கு தீமையும் கிடைப்பதை காண முடிந்தது.

## பாடசாலைக்கு சமூகமளிக்காத

# ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை



பாடசாலைகள் நாளை (21) திறக்கப்பட உள்ள நிலையில், நாளை பாடசாலைகளுக்கு செல்லாத ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஆசிரியர்கள் நாளை (21) பாடசாலைகளுக்கு வருவார்கள் என நம்புகிறேன். குழந்தைகளை நேசிக்கும் ஆசிரியர்கள் தான் இலங்கை வரலாற்றில் எப்போதும் இருந்திருக்கிறார்கள். ஜே.வி. பி பாடசாலைகளை மூட அழைப்பு விடுத்தபோது இந்த ஆசிரியர்கள் தங்கள் உயிரை பணயம் வைத்த வரலாறு உள்ளது. எனவே, ஜேவிபி மற்றும் பிற தொழிற்சங்கங்கள் என்ன கூறினாலும், பெரும்பாலான ஆசிரியர்கள் 21ஆம் திகதி பாடசாலைக்கு வருவார்கள் என்று நான் நம்புகிறேன் என்றார்.

பணிக்கு வராதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அவை சட்டரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் நடக்கும் விஷயங்கள். யாரும் வேலைக்கு வரவில்லை என்றால் அது பிரச்சினையாகிவிடும். அது பொதுவான விடயம் எனவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் சம்பளம் கிடைக்கிறதென்றால் வேலைக்கு வரும்படி கேட்டால், நீங்கள் வேலைக்கு வர வேண்டும். இது பொதுவானது, ஆசிரியர்கள் மட்டுமல்ல வேறு யார் வேலைக்கு வராவிட்டாலும் நடக்கக் கூடியதே எனவும் தெரிவித்துள்ளார். பணிக்கு வராதவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# எழுமாறானப் பிசிஆர் பரிசோதனைகள் உண்மையான நிலையை கண்டறிய அவசியம்




மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும், கொரோனா வைரஸ் ஆபத்துள்ள பிரதேசங்களில் எழுமாறானப் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹேந்திரன் பாலசூரிய, இவ்வாறான எழுமாறானப் பரிசோதனைகளின் ஊடாகவே நாட்டின் உண்மையான நிலையை கண்டறிய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதுத் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், விமான நிலையத்தின் ஊடாக வருபவர்களுக்குப் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல துறைமுகங்கள் ஊடாக நாட்டுக்கு வருபவர்கள், துறைமுகத்தில் சேவையாற்றுபவர்கள் உள்ளிட்டவர்களுக்கும் எழுமாறானப் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதால் கொழும்பில் வர்த்தக நோக்கங்களுக்காக அதிகளவான மக்கள் ஒன்று கூடுவதாகத் தெரிவித்த அவர், இந்த இடங்களிலும் நுவரெலியா, பதுளை, அநுராதபுரம் ஆகிய இடங்களிலும் எழுமாறானப் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை மீறி பஸ்களில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பயணிக்கிறார்கள். எனவே பஸ்களிலும் எழுமாறானப் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும். இவ்வாறான இடங்களில் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நாட்டின் உண்மையான நிலைமையை கண்டறிய முடியும் எனவும் கூறினார்.



# முன்னாயத்தம்...

கொரோனா வைரஸ் தொற்றினால் மூடப்பட்டிருந்த பாடசாலைகளில் 200 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகள், நாளை (21) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதயொட்டி பாடசாலை வளாகம் மற்றும் வகுப்பறைகளை சுத்தம் செய்யும் செயற்பாடுகள் நேற்று (19) முன்னெடுக்கப்பட்டன. மாத்தளை–இரத்தோட்டை நெலுவாகந்த பெட்டிஸ் வித்தியாலயம் மற்றும் நெலுவாகந்த தமிழ் வித்தியாலயம் ஆகியனவற்றின் சுத்தப்படுத்தல் முன்னெடுக்கப்பட்டதை படங்களில் காணலாம். (படங்கள்: மகேஸ் கீர்த்திரத்ன)



நானாட்டான் கால்நடை உரிமையாளர்களுக்கான

# அறிவுறுத்தல்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளை, அதன் உரிமையாளர்கள், ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரவைகளுக்கு மாத்திரமே கொண்டு செல்ல வேண்டும் என, நானாட்டான் பிரதேச செயலாளர் எஸ்.கிரிஸ் கந்தகுமார் தெரிவித்தார்.

இதன்போது, கால்நடைகள் உரிய சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, தடுப்பூசி ஏற்றப்பட்டு, மாடுகளுக்கு தோடு அணிவிக்கப்பட்டு காணப்பட வேண்டும் எனவும், அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர் சங்கத்துடன், நானாட்டான் பிரதேச செயலகத்தில், நேற்று முன்தினம் (18) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், குறித்த மாடுகள், நானாட்டான் பிரதேச செயலகத்தால் அனுமதிக்கப்பட்டு, மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படும் என்றார்.

மாடுகளை கொண்டு செல்கின்றவர்கள் பாலியாறு கிராம அலுவலர் பிரிவில் தேத்தாவடி கிராமத்துக்கு கிழக்கு பக்கமாக உள்ள பெருவெளி பகுதியில் மாத்திரமே, கால்நடைகளை வைத்திருத்தல் வேண்டும் எனவும், அவர் கூறினார்.

ஏனைய இடங்களாக பட்டிவெளி, பள்ளத்துவெளி, குடா வெளி, வெள்ளங்குடா போன்ற இடங்களில் மாடுகளை வைத்திருப்பது தடை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், பட்டிவெளியில் மாடுகளை வைத்துள்ளமை தொடர்பில் முகாமை செய்வதற்கு, தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

இந்த அறிவுறுத்தல்களையும் மீறி மாடுகளை வைத்திருந்து, குறித்த பிரதேச மக்களுக்கு பாதிப்பு ஏற்படுமாக இருந்தால், அடுத்த காலபோகத்தில், குறித்த மாடுகளை கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும், பிரதேச செயலாளர் எச்சரித்தார்.

மேலும், 'நானாட்டான் பிரதேசத்தில் உள்ள மாடுகளை தேத்தாவாடி பகுதிக்கு கொண்டு செல்ல இருந்தாலும், நானாட்டான் பிரதேசத்தில் உள்ள அனைவரும் தமது மாடுகளை தேத்தாவாடிக்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

'புல்லறுத்தான் கண்டல் பிரதேசம், இம்முறை மேய்ச்சல் தரவைக்காக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்திலேயே, மாடுகளை மேய்ச்சலுக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 354 ஏக்கர் நிலப்பரப்பு இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

'எதிர்வரும் 25ஆம் திகதியில் இருந்து, நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் தமக்கு என ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரவை பகுதிக்கு தமது கால்நடைகளை கொண்டு செல்ல முடியும்' என, அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின்

## படகு சேதம்; ஒருவர் மாயம்

■ செந்தூரன் பிரதீபன்

நெடுந்தீவுக்கும் கச்சத் தீவுக்கும் இடையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரின் படகு மோதியதில், இந்திய மீனவர்களின் படகு சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று (19), இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன் பிடித்துக் கொண்ட போது, இந்திய மீனவர்களின் படகை கடற்படையினர் தடுத்து நிறுத்த முற்பட்டபோது , இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் படகை தாக்க முற்பட்டுள்ளனர்.

இதன்போது கடற்படையினரின் ரோந்து கப்பல் முட்டியதில், இந்திய மீனவரின் படகு சேதமடைந்துள்ளது. இதில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த மீனவர்கள், தமிழ்நாடு - புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

நீரில் மூழ்கி காணாமல் போன மீனவரை தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்

முகமாலையில்

## மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை





■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி  முகமாலை பகுதியில், கண்ணிவெடி அகற்றப்பட்ட மேலும் 316 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு, மக்கள் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முகமாலை பகுதியில், கடந்த 10 ஆண்டுகளாக கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பகுதிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளதுடன், வாழ்வாதர பயிர்ச்செய்கை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில், முகமாலை பகுதியில், கண்ணிவெடி அகற்றப்பட்ட 316 ஏக்கர் காணியை பொதுமக்களிடம் மீளக் கையளிப்பது தொடர்பாக, பிரதமர் சார்பாக, கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட ஆலோசனை அலுவலர் லியனகே, அமைச்சின் பணிப்பாளர் பிறேமச்சந்திரன் ஆகியோர் விடுவிக்கப்படவிருக்கும் பிரதேசத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

தொடர்ந்து, இந்தக் காணிகளை பொதுமக்களிடம் மீளக் கையளிக்கும் நிகழ்வுக்கான ஏற்பாடு தொடர்பாக மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ. றுஷாங்கன் உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடினர்.

முல்லைத்தீவில்

## 73 ஆயிரம் மெற்றிக் டொன் உரம் மாத்திரமே தயாரிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில், தற்போதைய போகப் பயிர்ச்செய்கைக்கு, 1 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் டொன் சேதன உரம் தேவையாக உள்ள நிலையில், 73 ஆயிரம் மெற்றிக் டொன் சேதன உரம் மாத்திரமே தயாரிக்கப்பட்டு இருப்பதாக, மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில், வருடந்தோறும், பெரும்போகத்தில் 28 ஆயிரத்து 395 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்வது வழமையாகும். இதில், 21 ஆயிரத்து 302 ஹெக்டயர் நிலப்பரப்பில், நெற் செய்கையும் 4 ஆயிரத்து 419 ஹெக்டயர்; நிலப்பரப்பில், உப உணவு செய்கைகளும் 971 ஹெக்டயர்; நிலப்பரப்பில், தோட்டப் பயிர்ச்செய்கையும் 1,700 ஹெக்டயர் நிலப்பரப்பில் ஏனைய பயிர்செய்கைகளுமாக பயிரிடப்படவுள்ளன.

## 20 கிலோ கேரள கஞ்சாவுடன் பெண் கைது

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் - பேசாலை, 8ஆம் வட்டார பகுதியில், நேற்று முன்தினம் (18) இரவு, சுமார் 20 கிலோ 215 கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன், பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேசாலை, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஆவார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண், மேலதிக விசாரணையின் பின்னர், மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

ஓய்வூதியர்களின் கோரிக்கை தட்டிக்கழிப்பு;

# போராட்டத்துக்கு முஸ்தீபு

■ அஸ்லம் எஸ்.மௌலானா

ஓய்வூதியர்களின் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படாமல் தொடர்ந்தும் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருவதைக் கண்டித்து, போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தயாராகி வருவதாக, ஓய்வூதியர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் அம்பாறை மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இது குறித்து கிளையின் செயலாளர் அப்துல் லத்தீப் நேற்று (19) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்;

"நல்லாட்சி அரசாங்கத்தில் 2016ஆம் ஆண்டு சகல அரச ஊழியர்களின் சம்பளம் நூற்றி ஏழு மடங்காக அதிகரிக்கப்பட்டு, 2016 முதல் 2019 வரை கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு, 2020ஆம் ஆண்டுடன் பூரணப்படுத்தப்பட்டது.

"இது தொடர்பான அரச நிர்வாக சுற்றுநிரூபத்தில், 2016 முதல் 2019 வரையான காலப் பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு சம்பள அதிகரிப்புக்கமைய வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பு, 2020ஆம் ஆண்டு ஜனவரியில் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

"எனினும், ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, இந்த அதிகரிப்பை இடைநிறுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தால், நாடுபூராகவும் சுமார் 120,000 ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

"இத்தீர்மானத்தை வாபஸ் பெற்றுவிட்டு, அதிகரித்த ஓய்வூதியத்தை வழங்குமாறு முன்வைக்கப்பட்டு வருகின்ற கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்ப்பதாக இல்லை. எனவே, போராட்டங்களில் குதித்து அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு எதிர்பார்த்திருக்கிறோம்" என்றார்.





## 'நோயும் தீர்வும்' நூல் வெளியீடு

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் பைசால் இஸ்மாயில் தொகுத்த "நோயும் தீர்வும்" நூல் வெளியீட்டு விழா, சிலோன் மீடியா போரத்தின் ஏற்பாட்டில், போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ மஜீதின் தலைமையில், கல்முனை பரடைஸ் மண்டபத்தில் நேற்று (19) நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரபல வைத்தியர்களிடமிருந்து தேசிய பத்திரிகைகளுக்காக பெறப்பட்ட செவ்விகளின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் இந்த "நோயும் தீர்வும்" நூல் வெளியீட்டு விழாவுக்கு, பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் கலந்துகொண்டார்.

(படங்கள் – நூருல் ஹுதா உமர், எஸ்.அஷ்ரப்கான்)

ஊடகவியலாளர்

## நிமலராஜனின் நினைவு தினம்



■ வா.கிருஸ்ணா, க.விஜயரெத்தினம்

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 21ஆவது ஆண்டு நினைவு தினம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையம் ஆகியனவற்றின் ஏற்பாட்டில், மட்டு. ஊடக அமையத்தில் நேற்று (19) அனுஷ்டிக்கப்பட்டது.

மூத்த ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

## நபர் அடித்து கொலை; நண்பன் கைது

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள மரப்பாலம், முள்ளிச்சேனை தோட்டம் ஒன்றின் வாடியில் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் ஆண் ஒருவர், நேற்று (19) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், உயிரிழந்தவரின் நண்பன் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

மரப்பாலம், முள்ளிச்சேனையைச் சேர்ந்த 56 வயதுடைய கிருஷ்ணபிள்ளை நேசராசா என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, உயிரிழந்த நபரும் அவருடைய நண்பனும் சம்பவ தினமான நேற்று முன்தினம் (18) இரவு வீட்டுக்கு அருகாமையிலுள்ள தோட்டத்துக்குச் சென்று மது அருந்தியுள்ளனர்.

க.பொ.த உயர்தர

## மாணவர்களுக்கு நாளை பைஸர்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாணத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கல்வி கற்கும் 18, 19 வயது மாணவர்களுக்கு, நாளை (21) பைஸர் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

க.பொ.த உயர்தர பரீட்சை எழுதி பாடசாலைகளை விட்டு வெளியேறியவர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு – செலவுத்திட்ட

## முன்மொழிவுகள் பெறப்பட்டன

■ ஹஸ்பர் ஏ ஹலீம், தீஷான் அஹமட்



2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகள், பிரதேச செயலக ரீதியாக பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன்படி, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்கான முன்மொழிவுகளைப் பெறும் நிகழ்வு, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல தலைமையில், பிரதேச சபை மண்டபத்தில், நேற்று முன்தினம் (18) நடைபெற்றது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்தும் அபிவிருத்தி முன்மொழிவுகள் இதன்போது பெறப்பட்டன.

கிராமிய அபிவிருத்தியை துரிதப்படுத்தும் அரசாங்கத்தினுடைய தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைய, கிராம சேவகர் பிரிவு தோறும் முன்மொழிவுகள் பெறப்பட்டு வருகின்றன.

இம் முன்மொழிவுகளை கிராமத்திலிருந்து பெறுவதன் மூலமாக கிராமத்தின் தேவைகளுக்கேற்ப அபிவிருத்தி தேவைகளை மேற்கொள்ளக்கூடியதாக அமையும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல இதன்போது தெரிவித்தார்.

"திருகோணமலை மாவட்டத்திற்கு எதிர்வரும் வருடத்தில் 1,574 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற இருக்கின்றது. இதன்மூலம் கிராம உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார வசதிகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

"கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், திட்டங்களை மக்களிடம் இருந்து பெறுமாறு நிதியமைச்சர் அறிவுரை வழங்கியுள்ளார்.

நுவரெலியாவுக்கு

# நுழைய விடாதீர்கள்

## மாவட்ட செயலாளர் பொலிஸாருக்கு பணிப்புரை

டி.சந்ரு ,பி.கேதீஸ்




கொரோனா தொற்று காரணமாக மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாலும் கொரோனா தொற்று பரவாமல் இருப்பதற்காகவும் வேறு மாகாணங்களிலிருந்து நுவரெலியாவுக்கு வருகை தருவோரை உடனடியாகத் திருப்பி அனுப்புமாறு, நுவரெலியா பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்று வீதமும் உயிரிழப்பு வீதமும் குறைவடைந்து வரும் இவ் வேளையில், வெளிமாகாணங்களில் இருந்து நுவரெலியாவிற்கு வருபவர்கள் மூலம் மீண்டும் தொற்று அதிகரிக்கலாம்.

ஆகையால் வெளி மாகாணங்களிலிருந்து நுவரெலியாவிற்கு வருவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் பல்வேறு முறைகளில் நுவரெலியாவுக்கு வருகை தருவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே, இங்கு வருபவர்களை திருப்பி அனுப்பும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

மத்திய மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் நுவரெலியாவுக்கு வருகை தருவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனை தடுக்க வேண்டும் சாதாரண நாள்களை விட விடுமுறை நாள்களில் நுவரெலியாவுக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாகவும் அதனால் நுவரெலியாவில் காணப்படும் ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளை சட்டரீதியில் நடத்துமாறும் அவற்றில் விருந்துபசார நிகழ்வுகளை நடத்த வேண்டாமென்றும் ஆலோசனை வழங்கியுள்ளதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நுவரெலியாவுக்கு வருகை தருவோர் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்பில் கண்காணிக்குமாறு சுகாதாரத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கொட்டகலை பிரதேச சபையின்

# பட்ஜெட் நிறைவேற்றம்

பி.கேதீஸ், துவாரகஷின்கொ

ட்டக்கலை பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 14 விருப்பு வாக்குகளால் நேற்று முன்தினம் (18) நிறைவேற்றப்பட்டது.

தவிசாளர் ராஜமணி பிரசாந் சமர்பித்த 2022 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவு திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, சபைக்கு சமூகமளித்த 16 உறுப்பினர்களில் 14 உறுப்பினர்கள் ஆதரவாகவும் ஒருவர் எதிர்ப்பாகவும் வாக்களித்தனர். இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களான பி.ரவிச்சந்திரன், கே.கல்யாணகுமார்,எஸ். லெட்சுமணன், பி.நாகேந்திரன், எம். அஞ்சலாதேவி, கே.கலாவதி ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணி கட்சியை சேர்ந்த எஸ்.ராஜா எதிர்த்து வாக்களித்தார்.

வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து தவிசாளர் ராஜமணி பிரசாந்த் உரையாற்றுகையில்,

நாட்டில் நிலவிய கொரோனா பரவல் காரணமாக, எமது சபையின்

2022 ஆம் ஆண்டுக்கான சபைக்கான வரவு 14 கோடியே 65 இலட்சத்து 20 ஆயிரத்து 900 ஆயிரம் ரூபாவாகவும், செலவினமாக 14 கோடியே 65 இலட்சத்து 19 ஆயிரத்து 506 ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

எமது சபையானது அரசியல், தொழிற்சங்க பேதத்துக்கு அப்பால் எல்லோருக்கும் பொதுவான சேவையை வழங்கி வருவதால், எந்த விதமான பேதமும் இல்லாமல் வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொது மக்கள் எதிர்பார்க்கின்ற சேவையை நாம் நிச்சயம் வழங்குவோம். எமது சபையின் ஊடாக கொரோனாவை முற்றாக ஒழித்தல், சகல வட்டாரங்களுக்கும் வாசிகசாலை வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், எல்லோருக்கும் குடிநீர் பெற்றுக் கொடுத்தல், சகல தோட்டங்களுக்கும் கொங்கிரீட் பாதைகளுக்குப் பதிலாக கார்பட் பாதைகளை அமைத்தல் முதலான பிரதான விடயங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார்.

ஹட்டன் கல்வி வலயத்தில்

# 74 பாடசாலைகள் நாளை ஆரம்பம்

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் கல்வி வலயத்தின் கீழுள்ள 200 மாணவர்களுக்குக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர் தொகையைக் கொண்ட 74 பாடசாலைகளை, நாளை (21) ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஹட்டன் கல்வி வலய பணிப்பாளர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இதற்கமைய, 53 தமிழ் பாடசாலைகளையும் 21 சிங்கள பாடசாலைகளையும் இவ்வாறு திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

குறித்த பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அன்றைய தினம் கடமைகளுக்கு சமூகம் அளிப்பர் என தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றால் ஒன்றரை வருடத்துக்கு அதிக காலம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால், மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் இந்த நிலையில், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள்ளை வெற்றிகரமாக முன்னெடுக்க தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு ஆசிரியர் மற்றும் அதிபர்களிடம் தான் கோரி நிற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலிய பிரதேச இளைஞர்களுக்கு

# சுயதொழில் பயிற்சிகள் வேண்டும்

இரா.யோகேசன்



மஸ்கெலியா பிரதேச சபையூடாக குறித்த பிரதேசத்திற்குட்பட்ட, வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் பயிற்சிகளை வழங்கப்படல் வேண்டுமென, மரே வட்டாரத்தினுடைய பிரதேச சபை உறுப்பினர் எஸ். சுரேஸ்குமாரால், சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

இப்பிரதேசத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு வயரிங் ,கணிணி ,மேசன், தையல் போன்ற வேலைகளுக்கான பயிற்சிகளை மஸ்கெலியா பிரதேச சபையூடாக மேற்கொள்ள ஒரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மஸ்கெலியா பிரதேசத்தில், க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு பின்னர் மூன்று அல்லது ஆறு மாதங்கள் என்ற அடிப்படையில் தொழிற் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் இதற்காக சிறந்த வளவாளர்களையும் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

மேலும் காளான் வளர்ப்பு எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பான செயலமர்வுகளையும் அதற்கான ஊக்குவிப்புகளையும் மேற்கொள்வதன் மூலம், எமது இளைஞர் யுவதிகள் சுயதொழிலை வீட்டிலிருந்தே மேற்கொள்வர். அது போலவே யோகட் செய்யும் முறைகளை ஊக்குவிப்பதன் மூலம் பல வருமானங்களையும் பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுமென சபையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



கேகாலையில்

# நான்கு மாடிக் கட்டத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது

என்.ஆராச்சி

கேகாலை பிரதேச்சபையால் கேகாலை- ரங்வெல பிரதேத்தில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள நான்கு மாடி கட்டடத்துக்கான பணிகள், நேற்று (18) ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில், இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, கனக ஹேரத் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் 350 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், இந்த நான்கு மாடிக் கட்ட்டத்தின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# தீபாவளி முற்பணம் ரூ. 15,000 வழங்குக

## வடிவேல் சுரேஸ் எம்.பி வேண்டுகோள்

தீபாவளி தினத்தை முன்னிட்டு, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு முற்பணமாக ரூபாய் 15,000 ரூபாயை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்து, பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொலைநகல் மூலமாக வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

நாளுக்கு நாள் பொருட்களின் விலையேற்றம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைப்பு முறையான சம்பளம் இன்மை என்பவற்றின் விளைவாக அசௌகரியமான சூழ்நிலையிலேயே பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை நடாத்திச் செல்கின்றார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் மனிதாபிமான ரீதியில் பெருந்தோட்ட நிர்வாகங்களும் நடந்துகொள்ளவேண்டும்.

ஆகவே பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு மாதாந்தம் அறவிடும் வகையில், தீபாவளி முற்பணமாக, 15,000 ரூபாயை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

அதிகாரிக்கு அழுத்தம்

# இரத்தோட்டையில் எதிர்ப்பு

மஹேஸ் கீர்த்திரத்ன



இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி அதிகாரி ஒருவரை, மாத்தளை மாவட்டத்தின் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஒருங்கிணைப்பு செயலாளர் ஒருவர் விடுத்துள்ள மிரட்டலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று (18) பகல் இரத்தோட்டை- கைகாவல பிரதேச செயலக அலுவலகத்துக்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிராமிய குழு கூட்டங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது, ஆளுங்கட்சி அரசியல்வாதிகளால் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள், கடமைகளுக்கு இடையூறு ஏற்படுவதாகவும், அரசியல்வாதிகள் ஆதரவாளர்கள், அதிகாரிகளுக்கு அழுத்தம் விடுப்பதை நிறுத்த வேண்டும் என தெரிவித்தே, இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டனில் தீபாவளி நடைபாதை வியாபாரம் தொடர்பில்

# இதுவரை தீர்மானிக்கவில்லை

சுதத்.எச்.எம்.ஹேவா

நாட்டில் கொரோனா தொற்று தொடர்பான அச்சம் முழுமையாக நீங்காமை காரணமாக, ஹட்டன் நகரில் இம்முறை தீபாவளி நடைபாதை வியாபாரத்துக்கு அனுமதி வழங்குவதா, இல்லையா? என்பது தொடர்பில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என, ஹட்டன்- டிக்கோயா நகரசபையின் தவிசாளர் எஸ். பாலச்சந்திரன் தெரிவித்தார். கொரோனா பரவல் காரணமாக கடந்த வருடமும் தீபாவளி பண்டிகைக்கான நடைபாதை வியாபாரத்துக்கு என ஒதுக்கப்பட்ட பகுதியைத் தவிர வேறு இடங்களில் அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவித்த அவர், இதனால் நகரசபைக்கு வருடாந்தம் கிடைக்க வேண்டிய 5 மில்லியன் ரூபாய் வருமானம் இழக்கப்பட்டுள்ளது என்றார்.







# தின சந்தை திறந்து வைப்பு

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், நிர்மாணிக்கப்பட்ட தின சந்தை தொகுதி, பொது மக்களின் பாவனைக்காக வைபரீதியாக அக்கரப்பத்தனை பிரதேச சபையின் தலைவர் சு.கதிர்ச்செல்வன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் செயலாளர்,உறுப்பினர்கள் நகர வர்தகர்கள் பொது மக்கள் கலந்துக்கொண்டார்கள். (பா.பாலேந்திரன்)

குடிசையில் வசித்த தம்பதிகளுக்கு

# நிரந்த வீடு கையளிப்பு

எம். செல்வராஜா, நடராஜா மலர்வேந்தன்



பொலித்தீன் உறையிலான குடிலொன்றில், இரண்டு பிள்ளைகளோடு அவல வாழ்க்கையை மேற்கொண்ட பசறை- எல்டப் தோட்ட கீழ்ப்பிரிவைச் சேர்ந்த சதீஸ்கண்ணா தம்பதிகளுக்கு, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்த குமார், தனது சொந்த நிதியினூடாக நிரந்தர வீடொன்றினை அமைத்து அதனை உரிமையாளரிடம் நேற்று முன்தினம் (18) கையளித்தார்.

# மனங்களை மட்டுமன்றி மாடுகளையும் புண்ணாக்கிய விலையுயர்வு

அரசாங்கத்தால் எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானங்களும் ‘மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதை’யாகத்தான் இருக்கிறது. இறுதியில் எங்கே போய் நிற்கப்போகிறது என்பது தெரியாமலே இருக்கிறது.

அடுத்த வேளைக்கு என்ன செய்வோமென நினைப்போரின் மனங்களில், கொதிக்கும் எண்ணெயை வார்த்தால் போல, விலைவாசி அதிகரிப்புகளும் ஒவ்வொரு நாளும் எகிறிக் கொண்டே போகின்றன.

அடுத்த வேளையை நினைப்பதற்குப் பதிலாக, இந்தவேளை எவ்வாறு வயிற்றுக்கு ஆகாரத்தைத் தேடிக்கொள்வது என்பது, அடிமட்ட மக்களின் பிரச்சினையாக இருக்கிறது. எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணப்படாது, அவை அனுமான் வால்போல் நீண்டுகொண்டே செல்கின்றன.

ஒவ்வொருநாளும் புதுப்புது பிரச்சினைகளை, மக்களின் தலைகளில் அரசாங்கம் சுமத்திக்கொண்டே செல்கிறது.

எரிபொருட்களின் விலைகள் அதிகரித்தாலேயே, ஏனைய பொருள்களின் விலைகள் கிடுகிடுவென அதிகரித்துவிடும். கூவியழைத்து விற்பனை செய்யும் பொருட்கள் முதல், குளிரூட்டப்பட்ட வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் அத்தனை பொருட்களின் விலைகளும் எகிறிவிடும்.

ஒரு பொருளின் விலையைக் கூட ஞாபகத்தில் வைத்திருக்க முடியாத அளவுக்கு, ஒவ்வொருநாளும் விலைகள் அதிகரித்துகொண்டே செல்கின்றன. இதன்மூலம், சாதாரண மக்கள் மீது சுமைகளைச் சுமத்தாத வகையில், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் எவையும் இவ்வரசாங்கத்திடம் இல்லையென்பது கண்கூடாகிறது.

இந்நிலையில், மீண்டுமொரு தடவை எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் விலைக் குளறுபடிகள் இருக்கத்தான் செய்கின்றன. எரிபொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படுமாயின், ஏனைய பொருட்களின் விலைகளை, நினைத்துக்கூட பார்க்கமுடியாது.

பால்மாவின் விலையால், சாதாரண மக்கள் பெரும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒரு வேளைகூட பால்தேநீரை குடிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமையையே அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

ஹோட்டல்களை நம்பியிருப்போரின் நிலைமையை சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. விலை அதிகரிப்புடன், தேநீர் கோப்பையின் அளவு குறைந்திருக்கிறது. விலைகளை அதிகரிக்க அனுமதியளிக்கும் அரசாங்கம், பொருட்களின் தரம், நிறை, அளவு ஆகியன உள்ளிட்டவற்றையும் கண்காணிக்க வேண்டும்.

தீர்மானிக்கும் சக்தி, அரசாங்கத்துக்கு அப்பால் இருப்பதால், பெயருக்காக மட்டுமே இவ்வரசாங்கம் இருக்கிறது என்பதை, அரிசி விவகாரத்தில் நன்றாகவே புரிந்துகொள்ள முடிந்துள்ளது.

இதற்கிடையில், மாடுகளை வளர்ப்போரின் மனங்களில் பாலை வார்ப்பதைப் போல, ஒரு லீற்றருக்கான கொள்வனவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சந்தோஷத்தை அனுபவிப்பதற்கு முன்னர், மறுகன்னத்தில் அறைந்தாற்போல, புண்ணாக்கின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், மாடு வளர்ப்பவர்கள் மாடாய் உழைத்துத் தேய்ந்துபோகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

விலைகளை அதிகரித்து, மனிதர்களின் மனங்களை புண்ணாக்கிய அரசாங்கம், புண்ணாக்கின் விலைகளை அதிகரித்து மாடுகளின் தீவனத்திலும் விளையாடி புண்ணாக்கிவிட்டது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தெரிய வேண்டிய விடயங்களைத் தெரியவேண்டின் தேடுங்கள். அறிவுத் தேடலே அறிஞர்களை உருவாக்கும். ஒருவிடயத்தைப் படித்து அறிய, எடுத்த எடுப்பிலேயே, அவ்விடய தானத்துடன் தொடர்புடைய இன்னும் ஒருவரைக் கேட்காமல், சம்பந்தப்பட்ட நூல்களைப் படித்து ஆராயவும்.

இதனால் நீங்கள் தேடிய விடயங்களுன் புதிதான பல தகவல்களையும் கண்டறிந்து விடுவீர்கள். ஆயினும் படித்ததில் சந்தேகம் இருந்தால், உங்களுக்குத் தெரிந்த ஆசான்களின் உதவியை நாடுங்கள்!

புதியன அறிய, தேடல்கள் அவசியம். ஒருவர், தனது முயற்சியால் ஒன்றைக் கண்டு கொண்டால், அதுவே பெரிய மகிழ்ச்சி. படிப்பதில் ஆர்வம் வரும். உங்களுக்கும் உயரிய அறிவு இருப்பதை நம்புக. அறிவுநிலை பொதுவானது.

வேலை செய்தால் தேகம் களைக்கும். இதனால் அது வலிமை பெறும். கற்றலின் போது, சில சமயங்களில் புதிய விடயங்கள் புரியாது போனால், அலுப்புக் கொள்ளத் தேவையில்லை.


மாபெரும் விஞ்ஞானிகள், அறிஞர்கள் தொடர்ந்தும் ஆராய்ந்தபடியே இருக்கிறார்கள். எங்கள் ஆரம்ப அறிவு வலுப்பெற வேண்டும்.

கல்வி கற்பதே, நல்ல பொழுதை உருவாக்குவதற்காகும் என்பதை, உறுதியுடன் உள்ளத்தில் இருத்திக் கொள்வோம்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாத சமயம்ன்

## கடிதங்கள்

### ஓட்டமாவடி எல்லை வீதியில் ஆபத்தான குழி



கோறளைப்பற்று, மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட எல்லை வீதியில் ஏற்பட்டுள்ள ஆபத்தான குழியை, புனர்நிர்மாணம் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக, குறித்த வீதியின் நடுவே செல்லும் வடிகான், இடிந்த நிலையில் புனர்நிர்மாணம் செய்யப்படாமல் காணப்படுகிறது. இவ்வீதியில் பயணிக்கும் நபர்கள், குறித்த குழியில் விழுந்து செல்கின்றனர்.

கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் குறித்த வீதியில் ஏற்பட்டுள்ள குழியை, புனர்நிர்மாணம் செய்து, பயணிகளை விபத்திலிருந்து பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேச மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

அத்தோடு, எதிர்வரும் காலம், மழைக் காலம் என்பதால், குறித்த குழியில் மழை நீர் தேங்கி நின்று, டெங்கு பெருகும் அபாயம் ஏற்படக் கூடும் என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எச்.எம்.எம். பர்ஸான்

# ஜெனீவா வாக்குறுதிகளும் உள்நாட்டு மறுப்புகளும்



எம்.எஸ்.எம். ஐயூப்

அரசியல்வாதிகள் குறைந்தபட்சம் தம்மைப் பதவியில் அமர்த்தும் மக்களையாவது ஏமாற்றக் கூடாது. ஆனால், அவர்கள் ஏமாற்றுகிறார்கள்.

மக்களில் பெரும்பாலானவர்கள் அரசியல், பொருளியல் போன்ற விடயங்களைப் படிக்காதவர்கள். படித்தவர்களும்கூட, அரசியல்வாதிகள் எதைக் கூறினாலும் சுயநலத்துக்காக ‘ஆமாம் சாமி’ போடுகிறார்கள்; அல்லது, எதையும் எதிர்க்கிறார்கள். எனவே, அரசியல்வாதிகள் இலகுவில் மக்களை ஏமாற்றலாம்.

ஆனால், இலங்கையில் அரசியல்வாதிகள், சர்வதேச அமைப்புகளின் தலைவர்களையும், படிக்காதவர்களாகவோ அல்லது, ‘ ஆமாம் சாமி’ போடுபவர்களாகவோதான் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் போலும்!

இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயம் தொடர்பாக, புலம்பெயர்ந்த தமிழர்களோடு பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக, வெளிநாட்டில் கூறிய அரசாங்கம், இப்போது “அது முடியாது” என்று கூறுவதன் மூலம், சர்வதேச அமைப்புகளின் தலைவர்களையும், படிக்காதவர்களாகவும் ‘ ஆமாம் சாமி’ போடுபவர்களாகவும்தான் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த மாதம் 19ஆம் திகதி, ஐ.நா செயலாளர் நாயகம் அண்டோனியோ குட்டரெஸ்ஸையும் சந்தித்து கலந்துரையாடினார். அப்போது, “நாட்டின் உள்விவகாரங்கள், உள்நாட்டுப் பொறிமுறையொன்றின் மூலமே தீர்க்கப்பட வேண்டும்” எனத் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய, இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக, புலம்பெயந்துள்ள தமிழர்களை அழைப்பதாகத் தெரிவித்தார்.

ஆனால், இப்போது, “புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகள், இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளதால், அவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்துவது சட்டவிரோதமாகும். அதனால், அவற்றுடன் பேச்சுவாரத்தை நடத்தப் போவதில்லை” என்று, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ‘டெய்லி மிரர்’ பத்திரிகைப் பேட்டியொன்றில் தெரிவித்திருக்கின்றார். இப்பேட்டி, அப்பத்திரிகையில் சனிக்கிழமை (16) பிரசுரிக்கப்பட்டு இருந்தது.

இது போன்ற முரண்பாடுகளை, மக்கள் அறிந்தவுடன், தமது முன்னைய செய்தியை மறுத்து, தமது கருத்தை ஊடகங்கள் திரித்துக் கூறியிருப்பதாகக் கூறுவது, அரசியல்வாதிகளின் வழமையாகும். ஆனால், ஜனாதிபதி அவ்வாறு கூறவில்லை; கூறவும் முடியாது.

ஏனெனில், ஐ.நா செயலாளர் நாயகத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் தொடர்பான செய்தி, ஜனாதிபதி செயலகத்தால் தான் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டது. இந்தக் கருத்தை, ஐ.நா செயலாளர் நாயகத்திடம் கூறுவதற்கு முன்னர், ஜனாதிபதி, இதைப் பற்றி தமது வெளிவிவகார அமைச்சரோடாவது கலந்துரையாடவில்லை? மறுபுறம், வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதியின் ஆலோசனையின்றி அதை மறுத்திருப்பாரா?

உண்மையிலேயே, புலம்பெயர் தமிழர்களுடன் பேச வேண்டும் என்று எவரும் கேட்கவில்லை. அவ்வாறு இருக்க, வலிந்து சென்று அவ்வாறானதொரு வாக்குறுதியை அளித்துவிட்டு, அதைப் பின்னர், முடியாது என்று கூறி, வலிந்து தமது நம்பகத்தன்மையை இழகும் நிலைமை தேவையா?

தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்த, சட்டத்தில் இடமில்லை என வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார். அவ்வாறாயின், அதையாவது தெரியாமலா ஜனாதிபதி மேற்படி கருத்தை, ஐ.நா செயலாளர் நாயகத்திடம் தெரிவித்தார்?

ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் ஜனாதிபதி கலந்துரையாடல் நடத்திய உடனேயே, அரசாங்கம் அக்கருத்தை மாற்றிக் கொண்டு இருக்கிறது போலும்! எனவே தான், ஜனாதிபதி அக்கருத்தை மூன்று நாள்களுக்குப் பின்னர், அதாவது செப்டெம்பர் 22ஆம் திகதி, ஐ.நா பொதுச்சபையில் நிகழ்த்திய தமது உரையில் தெரிவிக்கவில்லை.

2001ஆம் ஆண்டுக்கு முன்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்தில், அரசியலமைப்புத்துறை அமைச்சராக ஜீ.எல். பீரிஸ் இருந்தார். அக்காலத்தில், தமது அரசாங்கம், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என, சந்திரிகா தெரிவித்து இருந்தார். அப்போது, புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டு இருந்தது.

இதைப் பற்றி ஊடகவியலாளர்கள் பீரிஸிடம் கேட்ட போது, “பேச்சுவார்தை நடத்த புலிகளும் விரும்பினால், தடையை நீக்கிவிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தலாம்” என்று அவர் பதிலளித்தார்.

அவ்வாறாயின், இப்போது மட்டும் புலம்பெயர்ந்த தமிழர் அமைகள் மீதான தடை, எவ்வாறு பேச்சுவார்த்தைக்குத் தடையாகும்? தடையை நீக்கிவிட்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டியது தானே?

கடந்த பல வருடங்களாக, அரச தலைவர்கள் வெளிப்படையாகவே இவ்வாறு சர்வதேச சமூகத்தையும் உலகத் தலைவர்களையும் ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் செயற்பட்டு வருகிறார்கள். உதாரணமாக,புலிகளுடனான போர் முடிவடைந்தவுடன் அதாவது, 2009 ஆம் ஆண்டு மே மாதம் ‘பொறுப்புக் கூறல்’ என்ற விடயத்தில், அப்போதைய ஐ.நா செயலாளர் நாயகம் பான் கி-மூனுடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொண்டார். ஆனால், அந்த உடன்பாட்டின்படி பொறுப்புக்கூறும் விடயத்தில், அவர் எதையும் செய்யவில்லை. இது, உலகை ஏமாற்றும் செயல் என்று அவர் கருதவில்லை.

எனவே, 2010ஆம் ஆண்டு, இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில், தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர்கள் குழுவொன்றை, ஐ.நா செயலாளர் நாயகம் நியமித்தார். அதனை நியமிக்க அவர் நடவடிக்கை எடுக்கும் போதே, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை மஹிந்த நியமித்தார்.

2011ஆம் ஆண்டு, அந்த ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியது. அந்தப் பரிந்துரைகளை நிறைவேற்றுவதை, மஹிந்த புறக்கணித்தே வந்தார். அப்போதும், தாம் உலகை ஏமாற்றுகிறோம் என, அவர் நினைத்ததாகத் தெரியவில்லை.

அதன் காரணமாகவே, 2012ஆம் ஆண்டு முதல், ஐ.நா மனித உரிமைகள் பேரவை, வருடாந்தம் இலங்கை தொடர்பாக பிரேரணைகளை நிறைவேற்றுகிறது. அந்தப் பிரேரணைகளிலும், இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இராஜதந்திர விடயங்களில், ஒரு நாட்டின் நம்பகத்தன்மையானது பெரிதும் முக்கியமானதாகும். வல்லரசுகள் நம்பகத்தன்மையோடு நடந்து கொள்ளாமை வேறு விடயம். ஆனால், இலங்கை போன்ற சிறிய நாடுகள், சர்வதேசங்களுடன் உறவுகளைப் பேணும் போது, நாம் நம்பகத்தன்மையோடு நடந்து கொள்ளாவிட்டால், அது எம்மைப் பாதிக்கலாம். இதைத் தற்போதைய தலைவர்கள் மட்டுமல்லாது, கடந்த அரசாங்கதத்தின் தலைவர்களும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

2015ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குச் சென்ற, கடந்த அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பொறுப்புக் கூறல் விடயத்துக்காக இலங்கை மற்றும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் நீதிபதிகளைக் கொண்ட பொறிமுறையை அமைக்க உடன்பட்டார்.

அதன் பின்னர், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சர்வதேச ரீதியில் பெரிதும் பாராட்டப்பட்டார். ஆனால், மூன்று மாதங்களக்குப் பின்னர், பி.பி.சி பேட்டியொன்றில், “வெளிநாட்டு நிதிபதிகளுக்கு இடமளிப்பதில்லை” என்றார். சில மாதங்களுக்குப் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அதேபோல் மாறிவிட்டார்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக, நடவடிக்கை எடுப்பதற்காக ஓர் அலுவலகத்தை நிறுவுவதாக, முன்னைய அரசாங்கத்தின் தலைவர்கள் 2015 ஆண்டு மனித உரிமைகள் பேரவைக்கு வாக்குறுதி அளித்தனர். எனினும், 2018ஆம் ஆண்டே அதனை நிறுவினர். அவர்கள் இதயசுத்தியுடன் அந்த வாக்குறுதியை அளிக்கவில்லை என்பதையே இந்தத் தாமதம் காட்டுகிறது.

கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் முதலாவது கூட்டம், கடந்த வருடம் பெப்ரவரி- மார்ச் மாதங்களில் நடைபெற்றது. அப்போது, பொறுப்புக் கூறல் தொடர்பாக இது வரை நியமிக்கப்பட்ட குழுக்கள், ஆணைக்குழுக்கள் ஆகியவற்றின் பரிந்துரைகளை ஆராய்ந்து, அவற்றில் நிறைவேற்றக்கூடிய பரிந்துரைகளைக் கண்டெடுத்து, பரிந்துரை செய்வதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதாக, அப்போதைய வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்தார்.

கடந்த வருடம் முடிவடையும் வரை, அந்த ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. இந்த வருடம், மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் நெருங்கிய போதே, அதாவது ஜனவரி 22 ஆம் திகதியே, அந்தக் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவைப் பற்றிய வாக்குறுதியை அளித்து, ஒன்றரை வருடங்களாகியும் அக்குழு இனிமேல் தான் தமது பரிந்துரைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப் போகிறது.

மனித உரிமைகள் பேரவையும் அந்தக்குழுவின் பரிந்துரைகளை எதிர்ப்பார்த்து இருக்கிறது என்பது, மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர், இம்முறை மனித உரிமைகள் பேரவையில் ஆற்றிய உரை மூலம் தெரிகிறது. இலங்கைத் தலைவர்கள், போர் முடிவடைந்து 12 வருடங்களாக எதையும் செய்யாது, அப்படியும் இப்படியும் தள்ளிவிட்டார்கள்.

சென்னை

### சிங்களக் கடற்படையினரின்

# அத்துமீறல்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல், படகுக் கவிழ்ப்பு என சிங்களக் கடற்படையினரின் தொடரும் அத்துமீறல்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, ராமதாஸ் நேற்று (19) தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்ததாவது "வங்கக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற புதுக்கோட்டை மீனவர்களின் படகை சிங்களக் கடற்படைக் கப்பல் மோதிக் கவிழ்த்துள்ளது. அதில்,



மூன்று மீனவர்கள் கடலில் மூழ்கிவிட்டனர்; அவர்களில் ஒருவர் மாயமாகி விட்டார். சிங்களப் படையினரின் இந்தத் தாக்குதல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

சிங்களப் படைத் தாக்குதலில் கடலில் மூழ்கி மாயமான மீனவர் ராஜ்கிரணை மீட்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிதியுதவியும், சேதமடைந்த படகுக்கு இழப்பீடும் வழங்க அரசு முன்வர வேண்டும்.

தமிழக மீனவர்கள் கைது, தாக்குதல், படகுக் கவிழ்ப்பு என சிங்களக் கடற்படையினரின் தொடரும் அத்துமீறல்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். சிங்களக் கடற்படையினர் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" எனப் பதிவிட்டுள்ளார்.

திருப்பதி

## உண்டியல் வசூல் ரூ.3 கோடியாக உயர்வு



திருப்பதியில் பிரம்மோற்சவ நாட்களில் அதிகபட்சமாக ரூ.2 கோடி வரையே உண்டியல் வசூலான நிலையில் நேற்றையதினம் ரூ.3 கோடி உண்டியல் வசூலாகியுள்ளது.

தினசரி 30 ஆயிரம் பக்தர்கள் திருப்பதிக்கு தரிசனத்துக்காகச் சென்று வருகின்றனர்.

திருப்பதியில் நேற்று 28,513 பக்தர்கள் தரிசனம் செய்ததுடன், 13,707 பேர் முடிகாணிக்கை செலுத்தியுள்ளனர். அத்துடன் ரூ.3.01 கோடி உண்டியல் வசூலாகியுள்ளது.

பிரம்மோற்சவ விழா முடிந்து பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர். ரூ.300 கட்டண தரிசனம், இலவச தரிசனம் ஆகியவற்றிற்கு பக்தர்கள் முன்பதிவு செய்து வரவேண்டும் என்று தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

கொரோனா விதிமுறைகளின்படி திருப்பதியில் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருவனந்தபுரம்

## 4 வருடங்களுக்குப் பின்னர் திறக்கப்பட்ட இடுக்கி அணை



கேரளாவில் பெய்து வரும் கனமழையால் இந்தியாவின் மிகப்பெரிய அணைகளில் ஒன்றான இடுக்கி அணையில் இருந்து 4 ஆண்டுகளுக்கு பின்னர் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

கேரளாவில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக இடுக்கி அணை நிரம்பும் நிலையில் உள்ளதால் முதற்கட்டமாக வினாடிக்கு 30,000 கன அடி நீர் திறக்கப்படுகிறது.

வினாடிக்கு 1 லட்சம் கனஅடி வரை தண்ணீர் திறக்கப்படலாம் என்றும் பெரியாறு கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடுக்கி அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்ததால் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு 3ஆம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கையான சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடுக்கி அணை திறக்கப்பட்டதையடுத்து இடுக்கி மற்றும் எர்ணாகுளம் மாவட்டங்களில் உள்ள ஆறுகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. கனமழை காரணமாக விவசாய நிலங்கள், ரப்பர் தோட்டங்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன.

டேராடூன்

### உத்தரகாண்ட் கனமழையால் 16 பேர் பலி

## உதவிகளை வழங்குவதாக மோடி உறுதி



வட மாநிலங்களில் ஒன்றான உத்தரகாண்டில் தொடர்ந்து பெய்துவரும் கன மழையால் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் அம்மாநிலத்தின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதுடன், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

தொடர் கனமழை காரணமாக அணைகளின் நீர்வரத்து அதிகரிப்பால் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதால், 65 சதவீத வீதிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கவுலான் நதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் முக்கிய பகுதிகளை இணைக்கும் பாலத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது. வெள்ளம் காரணமாக முன்கூட்டியே பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலா பயணிகள் தங்கள் சொந்த ஊர் திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர்.

மழை மற்றும் வெள்ளத்தின் பாதிப்பு நிலவரம் குறித்து அம்மாநில முதல் மந்திரி புஷ்கர் சிங்கிடம் தொலைபேசி வாயிலாக கேட்டறிந்த பிரதமர் மோடி, மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் மத்திய அரசு செய்யும் என்றும் உறுதியளித்துள்ளார்.



ஆலப்புழா

### கொரோனா காலத்தில் மலர்ந்த காதல்

## சமையல் பாத்திரத்தை தோணியாக்கிய ஜோடி

சமையல் செய்யும் பாத்திரத்தைத் தோணியாகப் பயன்படுத்தி கோயிலுக்குள் சென்று ஆலப்புழாவைச் சேர்ந்த காதல் ஜோடியினர் திருமணம் செய்து அசத்தியுள்ளனர்.

சுகாதாரப் பணியாளர்களாகப் பணியாற்றி வரும் அம்பலப்புழா நகரைச் சேர்ந்த ஐஸ்வர்யா, தகழி நகரைச் சேர்ந்த ஆகாஷ் ஆகியோரே தடைகளைத் தகர்த்து திருமணம் செய்தனர்.

கொரோனா காலத்தில் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து கொரோனாவுக்கு எதிராகப் போரிட்டபோது ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொண்டபோது காதல் மலர்ந்தது. ஆலப்புழா மாவட்டம் தாளவாடி பண்ணையூர்காவு கோயிலில் நேற்றுமுன்தினம் திருமணம் செய்ய முடிவு செய்தனர்.

ஆனால், குடும்பத்தினர் எதிர்த்த காரணத்தினால், கடந்த 5ஆம் திகதியே பதிவுத் திருமணம் செய்துகொண்டாலும் முறைப்படி கோயிலில் மாலை மாற்றி, தாலி கட்டித் திருமணம் செய்ய இருவரும் விரும்பினர்.

எனினும், வெள்ளநீர் சூழ்ந்து கோயிலுக்குள் யாரும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால் திருமணத்தை வேறு நாளில் நடத்துமாறு கோயில் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால், ஆகாஷ், ஐஸ்வர்யா இருவரும் வேறு நாளில் திருமணம் செய்ய சம்மதிக்கவில்லை. நிச்சயக்கப்பட்ட நாளில் கோயிலுக்கு எப்படியாவது வருகிறோம், திருமணம் நடத்தித்தர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

இதையடுத்து கோயில் சார்பில் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் பெரிய அலுமினியப் பாத்திரத்தை தோணியாகப் பயன்படுத்தி திருமண ஜோடி அழைத்து வரப்பட்டது. காதல் திருமணத்துக்கு உறவுகளால் ஏற்பட்ட தடையையும், இயற்கையால் உருவான தடையையும் தகர்த்து சமையல் பாத்திரத்தில் அமர்ந்து வந்து இந்த ஜோடி திருமணம் செய்தது கேரளாவில் வைரலாகி வருகிறது.

சென்னை

### எந்த ஆவணமும் கைப்பற்றப்படவில்லை

## வழக்கை நான் சட்டப்படி எதிர்கொள்வேன்

இலஞ்ச ஒழிப்புத் துறையினர் நடத்திய சோதனையில் எந்த ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்று தெரிவித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர், இந்த வழக்கை சட்டப்படி எதிர்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் வீடு உட்பட 50 இடங்களில் இலஞ்ச ஒழிப்புத் துறையினர் நேற்றுமுன்தினம் சோதனையில் ஈடுபட்டனர்.

விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா மீது வருமானத்தை விட அதிக அளவில் சொத்து சேர்த்ததாக முதற்கட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சோதனையில் ரூ.23.85 இலட்சம் ரொக்கப்பணம், 4.87 கிலோ கிராம் தங்க நகைகள் மற்றும் 136 கனரக வாகனங்களின் ஆவணங்கள், 19 கணினி வன்தட்டுக்கள் (ஹார்ட் டிஸ்க்) வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்து விசாரணை இடம்பெற்று வருவதாகத் தெரிவித்த பொலிஸார், முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தொடர்பான இடங்களில் பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்து கணக்கீடு செய்யும் பணி தொடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

இவ்விடயம் தொடர்பில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் "இலஞ்ச ஒழிப்புத்துறை சோதனைக்கு முழுவதுமாக ஒத்துழைப்பு வழங்கினேன். இந்த சோதனையில் எந்த ஆவணமும் கைப்பற்றப்படவில்லை. இந்த வழக்கை நான் சட்டப்படி எதிர்கொள்வேன்" என்று தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில:

### 01. முழுமையாக நிர்மாணித்தல்

குருநாகல் மாகாண பொது மருத்துவமனையானது 2,355 கட்டில்களையும், 57 நோயாளர் விடுதிகளையும், 28 விசேட அலகுகளையும் கொண்டமைந்துள்ள மருத்துவமனையாகும்.

குறித்த மருத்துவமனையின் அபிவிருத்தித் திட்டத்திற்கமைய 2007-2009 காலப்பகுதியில் புதிய நோயாளர் விடுதிகளை அமைப்பதற்கான ஐந்துமாடிக் கட்டிடமொன்றை கட்டம் கட்டமாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், குறித்த கட்டுமானங்களில் இரண்டு மாடிகள் மாத்திரமே இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

காலஞ்சென்ற ஐயிலின் டி மெல் பெண்மணியின் இறுதி விருப்பு ஆவணத்தின் பிரகாரம் குருநாகல் மருத்துவமனைக்கு நோயாளர் விடுதியொன்றையோ அல்லது கட்டிடமொன்றின் பகுதியையோ நிர்மாணிப்பதற்கான உதவித்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பெண்மணியின் சொத்துக்களின் பொறுப்புதாரர்கள் இந்த ஐந்து மாடிக் கட்டடத்தின் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்து வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

குறித்த உடன்பாட்டின் பிரகாரம் அத்திட்டத்தை 02 வருடங்களில் நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்வதற்காக ஐயிலின் பெண்மணியின் சொத்துக்களின் பொறுப்புதாரர்களாக நியமிக்கப்பட்டுள்ள தரப்பினருடன் உடன்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 02. கைத்தொழில் வலயம்

பிரதேச செயலக மட்டத்தில் உற்பத்தி ஊக்குவிப்புக்களை மேம்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சு பிரதேச கைத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தென் மாகாணத்தில் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இணையாக மாத்தறை மாவட்டத்திலுள்ள தொழிற்துறைகளை இலக்காகக் கொண்டு புதிய அபிவிருத்தி வலயமொன்றை வெலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் சாலிமவுன்ட் தோட்டம் / ஹல்லல தோட்டத்தை மையமாகக் கொண்ட 200 ஏக்கர் காணியின் ஒரு பகுதியில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 03. மீள்நிர்மாணித்தல்

மஹமோதர மகப்பேற்று மருத்துவமனையின் கருத்திட்ட நிதியிடலுக்காக இலங்கை அரசாங்கம் மற்றும் ஜேர்மன் முகுறு வங்கிக்கும் இடையில் 28 மில்லியன் யூரோக்களுக்கான கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன்பின்னர், குறித்த கருத்திட்டத்திற்காக மேலதிக மிகைநிரப்புத் தொகையாக 13 மில்லியன் யூரோக்களைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த வங்கியுடன் மேலதிகக் கடன் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 04. கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

இலங்கை துறைமுக அதிகார சபையின் தேசிய துறைமுகங்கள் பிரதான திட்டங்கள் மூலம் கொழும்பு துறைமுகத்திற்கான சேவை வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை அபிவிருத்தி செய்வதற்கான அவசர தேவைகள் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, புளூமென்டல் பிரதேசத்தில் துறைமுகத்திற்கு அவசியமான சேவை வழங்கல் பிரிவொன்றை நடாத்திச் செல்வதற்கு துறைமுக அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது தற்போது புளூமென்டல் பிரதேசத்தில் அமைந்துள்ள துறைமுக அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இல்லத்தை பொருத்தமான இடத்தில் அமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ராகம, மஹர பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான 08 ஹெக்ரயார்களுடன் கூடிய காணியின் ஒருபகுதி கொழும்பு துறைமுகம் நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதியில் கருங்கல் விநியோகிக்கும் தொழிலிடமாக பேணப்பட்டு வந்துள்ளதுடன், தற்போது இக்காணி எந்தவொரு வகையிலும் பயனுள்ள செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படாமலும் உள்ளது.

### 05. கொள்கையை திருத்தம் செய்தல்

ஒரு துறைமுகத்தில் ஒரு விசேட துறையில் ஒரு கனரகப் பொறியியல் தொழிலகத்தை மாத்திரம் அமைப்பதற்கான அனுமதி வழங்கலே தற்போது நடைமுறையிலுள்ள கொள்கையாகும். பங்களாதேஷ், இந்தியாவின் கிழக்குக் கரையோரப் பிரதேசம், மியன்மார், இலங்கை போன்ற நாடுகளின் துரித பொருளாதார வளர்ச்சியால் வங்காள விரிகுடா சார்ந்த வலயங்களை மையமாகக் கொண்ட துறைமுகங்களை விருத்தி செய்வதற்காக திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தின் இயற்கையான அமைப்பு, குறித்த துறைமுகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான 2000 ஹெக்டேயர் காணி மற்றும் துறைமுக சேவைகளை வழங்குவதற்காக நிலவுகின்ற முன்னேற்றகரமான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### 06. கடற்கலன்களை சேவையில் ஈடுபடுத்தல்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான Mv. Ceylon Breeze மற்றும் Mv. Ceylon Princess போன்ற கடற்கலன்கள் இரண்டும் 2021/2022 தென்மேற்குப் பருவக்காற்றுக் காலப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக பொருத்தமான கடற்கலன்களை வாடகைக்குப் பெறுபவர்களைத் தெரிவு செய்வதற்காக சர்வதேச மற்றும் உள்ளூர் 'கடற்கலன்கள் வாடகைக்கு பெறுபவர்கள்' மற்றும் 'வர்த்தக முகாமைத்துவக் கம்பனி' இற்கு விருப்பக்கோரல் கோரப்பட்டுள்ளது.

இப்பெறுகைக்காக 04 நிறுவனங்கள் விருப்பக் கோரலைச் சமர்ப்பித்துள்ளன. அதற்கமைய,




அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய Mv. Ceylon Breeze மற்றும் Mv. Ceylon Princess எனும் இரண்டு கடற்கலன்களின் வர்த்தக முகாமைத்துவ ஒப்பந்தத்தை M/s Wallem shipping (Singapore) Pvt. Ltd. இற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 07. அதிகார சபை சட்டத்தை திருத்துதல்

நகரக் குடியிருப்புகள் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிகளைச் சரியான வகையில் மேற்கொள்வதற்கு இயலுமான வகையில் 2008 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்புக்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தை திருத்தம் செய்வதற்காக 2019 பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரசபையின் பணிகளை முறையான வகையில் மேற்கொண்டு செல்வதற்காக அதன் சட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய மேலதிக சில திருத்தங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளது.

குறித்த திருத்தங்களை உள்ளடக்கி 2008 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்புக்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தை திருத்தம் செய்வதற்கும், அதற்காக திருத்தப்பட்ட சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 09. தாவரங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

அருகிவரும் ஆபத்துக் கொண்ட விசேட விலங்கினங்கள் மற்றும் தாவர இனங்கள் தொடர்பான சர்வதேச வியாபாரம் பற்றிய சாசனத்தின் பங்காளி அரசாக இலங்கை 1979 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆம் திகதி குறித்த சாசனத்தில் கையொப்பமிட்டுள்ளது.

குறித்த சாசனத்தின் உறுப்புரைகளை உள்ளூரில் வலுவாக்குவதற்கு இயலுமான வகையில் 2009 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க விலங்கினங்கள் மற்றும் தாவர இனங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக 2016 செப்டெம்பர் மாதம் 06 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 10. சட்டக் கோவையை திருத்தம் செய்தல்

ஆபாசப் பேச்சுகளைத் தடை செய்யும் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2021 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த புதிய சட்டம் அறிமுகப்படுத்துவதற்கு இணையாக தண்டனைச் சட்டக் கோவையின் 285, 286 மற்றும் 289 (அ) உறுப்புரைகளை முடிவுறுத்துவதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்ட மூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 11. மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல்

நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த திருத்தங்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, அதற்கு இணையாக மோசடிகள் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் உறுப்புரையுடன் சேர்க்கப்பட்டுள்ள திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், 4 மற்றும் 7 ஆம் உறுப்புரைகளும் திருத்தப்படல் வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும், அதற்காக திருத்தப்பட்ட சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 13. இலங்கையில் உணவுப்பயிர் தேவைகள், நுகர்வு மற்றும் கிடைப்பனவு

உள்ளூர் உணவு உற்பத்தியின் வினைதிறனை அதிகரிப்பதற்காக பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமையொழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலையீட்டுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், உணவு, பயிர் உற்பத்தி தொடர்பான விவசாய, கால்நடை, கடற்றொழில் துறைகளுக்கு ஏற்புடைய அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகள், திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் உணவுப்பயிர் தேவைகள், நுகர்வு மற்றும் கிடைப்பனவு தொடர்பான ஒப்பீட்டு ரீதியான ஆய்வுக்கற்கை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நெல், தானியம் உள்ளிட்ட அவரை இனப் பயிர்கள், மரக்கறி, பழவகைகள் மற்றும் தெங்கு போன்ற பயிர்ச்செய்கைகள், மீன்பிடி மற்றும் கால்நடை உற்பத்தி போன்ற அடிப்படை உணவுத் தொகுதி உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்டுள்ள இவ் அறிக்கையை ஆராய்ந்து, அதன் வழிகாட்டலுக்கமைய 2022 -2024 காலப்பகுதிக்கான உணவுப்பயிர்களின் இலக்குகள் உள்ளிட்ட செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட, பிரதேச கமக்கார குழு, பிரதேச வாழ்வாதாரக் குழுத் தலைவர்களுக்கும், மாவட்டச் செயலாளர்கள் பிரதேச செயலாளர்களுக்கும் தேவையான ஆலோசனைகள், பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமையொழிப்புக்கான ஜனாதிபதி செயலணியால் வெளியிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா

# மெல்பர்ன் நகருக்கு விடுதலை



கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக உலகில் மிக நீண்ட காலம் முடக்க நிலையில் இருந்த அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகருக்கு விரைவில் விடுதலை கிடைக்கவுள்ளது.

விக்டோரியா மாநிலத்தின் தலைநகர் மெல்பர்னில் திட்டமிட்டதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பே இம் முடக்கநிலை தளர்த்தப்படவுள்ளதாகவும் இதன் பிரகாரம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை (22) முடக்க நிலை தளர்த்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


IMAGE : AP/REPRESENTATIVE IMAGE

நைஜீரியா

## மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில்

### 43 பேர் உயிரிழப்பு

சமீப காலமாக ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் தொடர்ந்து பயங்கரவாதத்த தாக்குதல்களும் ஆள் கடத்தலும் அதிகரித்து வருகின்றன.

அந்தவகையில் சகோடா மாகாணத்தில் நேற்றைய தினம் (19) மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 43 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத் தாக்குதல் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அம்மாகாண அரசு தெரிவித்துள்ளது.

ரஷ்யா

## கர்ப்பிணி பெண்ணை கடித்த கரடி



கர்ப்பிணிப் பெண்ணைக் கரடியொன்று கடித்துக் குதறும் வீடியோவொன்று இணையத்தில் வைரலாகி வருகின்றது.

ரஷ்யாவில் நடைபெற்ற சர்க்கஸ் நிகழ்ச்சி ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சர்க்கஸ் நிறுவனமொன்றில் பயிற்சியாளரான பணிபுரியும் குறித்த கர்ப்பிணிப் பெண்ணினது கட்டளைகளுக்கு அமைவாக செயற்படும் குறித்த கரடி சம்பவ தினத்தன்று திடீரென அவர் மீது பாய்ந்து தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் உடனடியாகச் செயற்பட்ட ஏனைய ஊழியர்கள் அக்கரடியிடம் இருந்து குறித்த பெண்ணைக் காப்பாற்றி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் ஆச்சரியப்படும் வகையில் அப்பெண்ணுக்கு பெரிய அளவில் காயங்கள் எதுவும் இல்லை எனவும் அவரது வயிற்றில் இருந்த குழந்தைக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது அக் கரடி சர்க்கஸ் நிகழ்ச்சியில் இருந்து நீக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சீனா

## சீனாவில் வலுப்பெறும் 'Worker Lives Matter'

சீனாவில் பல நிறுவனங்கள் கடைப்பிடித்து வரும், காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையான வேலை நேரத்தை எதிர்த்து workers lives matters என்னும் பிரசாரத்தை ஊழியர்கள் தொடங்கியுள்ளனர்.

996 என்றழைக்கப்படும் இவ்வேலைத் திட்டத்தில், வாரத்தில் 6 நாள்கள் தினமும் 12 மணி நேரம் பணிபுரியவேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இப்பிரசாரத்தின் ஒரு பகுதியாக பெறப்பட்ட தகவலின்படி, சீனாவின் Tencent, Alibaba, ByteDance உள்ளிட்ட பிரபல நிறுவனங்களில் பணிபுரியும் 4,000 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தினமும் 12 மணி நேரம் வேலை செய்வதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஊழியர்கள் அவர்களது குடும்பத்தார், நண்பர்களுடன் நேரம் செலவிட முடியாமல் போவதாகவும் அவர்களது குடும்ப வாழ்வு பாதிக்கப்படுவதாகவும், அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே workers lives matters என்னும் பிரசாரம் வலுவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




சுவீடன்

### கலந்து செலுத்திக்கொண்டால்

## எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்

இரண்டு வெவ்வேறு கொரோனாத் தடுப்பூசிகளை கலந்து செலுத்திக் கொண்டால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதாக சுவீடனில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த ஆய்வுக்காக 7 லட்சம் பேர் பயன்படுத்தப்பட்டனர் எனவும் அவர்களுக்கு முதலாம் கட்டத் தடுப்பூசியாக அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியும், 2ஆம் கட்டத் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியும் செலுத்தப்பட்டு 2 மாதங்கள் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது 2 வெவ்வேறு தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களுக்கு கொரோனாத் தொற்றுத் தாக்கும் ஆபத்து 67 சதவீதம் குறைவாக இருப்பதாகவும், எனினும் 2 தவணையும் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தால் , நோய் அபாயம் 50 சதவீதம் மட்டுமே குறைவாக இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## படுத்திருந்தவாறு படம் பார்த்தால் 66 லட்சம் ரூபா சம்பளம்

படுத்திருந்தவாறு படம் பார்த்தால் வருடமொன்றுக்கு 24,000 பவுண்ஸ் (இலங்கை மதிப்பில் சுமார் 66 இலட்சம் ) ரூபாய் சம்பளமாகத் தருவதாக நிறுவனமொன்று அறிவித்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த 'crafted beds' என்ற உயர் ரக படுக்கை உற்பத்தி நிறுவனமே தனது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த படுக்கைகளை அளிப்பதற்காக 'படுக்கை ஆய்வாளர்' என்ற வேலைக்கான இவ் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் இப்பணிக்குத் தெரிவு செய்யப்படும் நபர், அந்நிறுவனத்தின் படுக்கையில் இருக்கும் சௌகரியம் குறித்த தனது கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும் எனவும் வாரம் ஒரு புதிய படுக்கை அந் நபரின் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும், வாரம் ஒன்றுக்கு 37.5 மணி நேரங்கள் படுக்கையில் படுத்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவர் ஆண்டுதோறும் படுத்துக் கொண்டே நெட்ஃபிளிக்ஸில் படம் பார்த்துக் கொண்டிருக்கலாம் எனவும் 'netfilx and chill' என்ற புதிய திட்டத்தை இதற்காகவே அந்நிறுவனம் தயாரித்துள்ளதாகவும், அதற்கான செலவை அந்நிறுவனமே ஏற்றுக் கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




### இருபதுக்கு – 20 உலகக் கிண்ணத் தொடர்:

# நமீபியாவை வீழ்த்திய இலங்கை




இடம்பெற்றுவரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நமீபியாவுடனான குழு ஏ போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

நமீபியா: 96/10 (19.3 ஓவ. ) (பந்துவீச்சு: மஹேஷ் தீக்ஷன 3/25 [4], லஹிரு குமார 2/9 [3.3], வனிடு ஹஸரங்க 2/24 [4], சாமிக கருணாரத்ன 1/17 [4], துஷ்மந்த சமீர 1/19 [4])

இலங்கை: 100/3 (13.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: பானுக ராஜபக்ஷ ஆ.இ 42 (27), அவிஷ்க பெர்ணான்டோ 30 (28) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: மஹேஷ் தீக்ஷன

இதேவேளை, மற்றைய குழு ஏ போட்டியில் நெதர்லாந்தை அயர்லாந்து வீழ்த்தியிருந்தது. அயர்லாந்தின் கேட்டிஸ் கம்பர் நான்கு பந்துகளில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நமீபியாவும் நெதர்லாந்தும் மோதவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அயர்லாந்தும் இலங்கையும் மோதவுள்ளன.







### பயிற்சிப் போட்டிகளில்

## இங்கிலாந்தை வென்றது இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு  20 உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயிலுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் அகடமியில் நடைபெற்ற இங்கிலாந்துடனான போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இங்கிலாந்து: 188/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜொனி பெயார்ஸ்டோ 49 (36), மொயின் அலி ஆ.இ 43 (20), லியாம் லிவிங்ஸ்டோன் 30 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 1/26 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 0/23 [4])

இந்தியா: 192/3 (19 ஓவ. ) (துடுப்பாட்டம்: இஷன் கிஷன் ஆ.இ 70 (46), லோகேஷ் ராகுல் 51 (24), றிஷப் பண்ட் ஆ.இ 29 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: டேவிட் வில்லி 1/16 [3], லியாம் லிவிங்ஸ்டோன் 1/10 [2])



### இங்கிலாந்து பிறிமியர் லீக்:

## சமநிலையில் ஆர்சனல் கிறிஸ்டல் பலஸ் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், ஆர்சனலின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஆர்சனல், கிறிஸ்டல் பலஸுக்கு இடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஆர்சனல் சார்பாக, பியர்-எம்ரிக் உபமெயாங்க், அலெக்ஸான்ட்ரே லகஸேர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பலஸ் சார்பாக, கிறிஸ்டியன் பென்டெக்கே, ஒட்சொன்னே எடுவார்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## சிற்றிக்குச் செல்லும் அன்சு பாட்டி?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான அன்சு பாட்டியைக் கைச்சாத்திடுவது குறித்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி கருத்திற் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிற்றியின் முன்களவீரரான ரஹீம் ஸ்டேர்லிங்க், சிற்றியை விட்டு வெளியேறினால், அவரை பாட்டி மூலம் பிரதியிட சிற்றி விரும்புகின்றது.

பார்சிலோனாவுடன் ஓராண்டு ஒப்பந்தத்தை பாட்டி கொண்டுள்ள நிலையில், மேலும் இரண்டு ஆண்டுகளாக அதை நீடிக்கும் தெரிவை பார்சிலோனா கொண்டுள்ளது. தவிர, பாட்டியின் ஒப்பந்தத்தை நீடிக்கும் பேரம்பேசல்களில் பார்சிலோனா இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




### இந்தியாவின் பயிற்சியாளர்கள்

## பதவிக்கு விண்ணப்பிக்காத பாரத் அருண், ஶ்ரீதர்

இந்தியாவின் பந்துவீச்சு, களத்தடுப்புப் பயிற்சியாளர்கள் பதவிக்கு விண்ணபிக்காமலிருக்க இந்தியாவின் தற்போதைய பந்துவீச்சு பயிற்சியாளர் பாரத் அருண், களத்தடுப்புப் பயிற்றுவிப்பாளர் ஆர். ஶ்ரீதர் ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

இருவரும் விண்ணபிக்கத் தகுதியுள்ளவர்கள் என்றபோதும் தாங்கள் நீடிப்பை எதிர்பார்க்கவில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை ஒப்பந்தம் செய்ய இந்தியன் பிறீமியர் லீக் அணிகள் விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை, 20 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.